

# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்

ஆனி - ஆடி
ஜூலை - 2019

மலர் 8 இதழ் 7

## பொருளடக்கம்


| | |
|---|---|
| ஆசிரியர் பக்கம் | 3 |
| கீதை பிறந்தது எதற்காக? | 5 |
| பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| நீதிக் கதைகள் | 7 |
| பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| Vedantic Prayer | 9 |
| ஆச்சார்யாள் முகாம் | 11 |
| பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| திருக்குறள் நூற்றெட்டு | 16 |
| இராமாவதாரம் எதற்காக | 18 |
| தமிழ் பாகவதம் | 20 |
| க-யின் ஆரம்பம் | 22 |
| ஸ்ரீ ஸிந்து நதி மஹாத்மிஹம் | 25 |
| வ்யாஸ பகவானின் தர்மகோஷம் | 28 |
| மஹா பெரியவாளின் நினைவு மஞ்சரி - 15 | 30 |
| புராணக்கதை | 32 |
| வேதாந்த ஸாரம் | 35 |
| ஆடி மாத விசேஷ தினங்கள் | 37 |
| ருத்ர கீதை | 38 |
| த்ரிபுரஸுந்தரீ பாதத்ஸ்தவம் | 40 |
| பித்ரார்ஜிதம் | 41 |
| மகாபாரத சுருக்கம் | 43 |
| ஹிந்துமத ப்ராமண நூல்கள் | 46 |
| ஞானியும் ஞானபந்துவும் | 48 |


भाग्योदयेन बहुजन्मसमार्जितेन सत्संगमं च लभते पुरुषो यदा वै।
अज्ञानहेतुकृतमोहमदान्धकारनाशं विधाय च सदोदयते विवेकः।।

Man obtains the contact of saints only when the merits earned by him through many births ripen. Wisdom dawns in the wake of such contact dispersing the darkness of infatuation and arrogance which have their root in ignorance.


### நிர்வாகக் குழு

ஸ்ரீ N. சிவராமகிருஷ்ணன்
ஸ்ரீ K. ஜயராமகிருஷ்ணன்
டாக்டர் வெங்குடி B. ரிஷிகேசன்
டாக்டர் G. சங்கரநாராயணன்




# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்


கௌரவ தலைமை ஆசிரியர் :
டாக்டர் S. மணி திராவிட் சாஸ்த்ரி

ஆசிரியர் குழு :

பேராசிரியர் N.வீழிநாதன்
டாக்டர் R.கிருஷ்ணமூர்த்தி சாஸ்த்ரிகள்
பேராசிரியர் S. ஸ்ரீநிவாஸ சர்மா
ஸ்ரீ T.N. ராமசந்திரன்
ஸ்ரீ T.S. ராகவன்
பேராசிரியர் விஷ்ணுபோத்தி V.S.
ப்ரஹ்மஸ்ரீ ஸ்ரீரமண சர்மா
பேராசிரியர் ம.வே.பசுபதி
பேராசிரியர் K. ஸ்ரீநிவாஸன்



வெளியிடுவோர் :
ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடத்தின் சார்பில்
ஸ்ரீகாமகோடி கோசஸ்தானம்

அலுவலக முகவரி :
ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடம்
நெ.1.சாலைத்தெரு,
காஞ்சீபுரம் - 631502.
தொலைபேசி : 044 - 27233115

மின் அஞ்சல் :
kamakotipradeepam@gmail.com


சந்தா விவரம்

| | |
|---|---|
| ஒரு இதழ் | ரூ. 20/- |
| ஒரு வருடத்திற்கு | ரூ. 220/- |
| மூன்று வருடங்களுக்கு | ரூ. 600/- |
| ஐந்து வருடங்களுக்கு | ரூ. 1000/- |
| ஆயுள் சந்தா | ரூ. 5000/- |
| புரவலர் | ரூ. 10000/- |


Published by : Sri Kamakoti Kosasthanam on behalf of Sri Kanchi Kamakoti Peetam, No1, Salai Street, Kancheepuram - 631502. Ph : 044 - 27233115.

Periodicity : Monthly.

Printed at : Jaiganesh Offset, Chennai.



श्रुतिशिखरसमुत्थस्तत्त्वसंवित्प्रकाशः कलितिमिरनिवृत्त्यै कल्पमानश्चकास्तु।
शिवगुरुसुतमार्गं दीपयन् चन्द्रमौलेः शिशिरकरुणया श्रीकामकोटिप्रदीपः।।

कामकोटिप्रदीपोऽयं सतां विभ्राजतां गृहे।
यत्प्रकाशलवात्सद्यः पापध्वान्तो हतो भवेत्।।

# ஆசிரியர் பக்கம்

## ரந்திதேவனும் ஐ.எம்.ஏ.வும்

இதென்ன விந்தை? சம்பந்தமில்லாத இரண்டு விஷயங்களை சம்பந்தப்படுத்தியுள்ளது என்று வாசகர்கள் நினைக்கலாம். தொடர்பு இருக்கவேதான் ப்ரஸங்கமும். அது பற்றி பின்பு பேசுவோம். முதலில் யாரிந்த ரந்தி தேவன்? அவன் செய்த கார்யமென்ன? சற்று பார்ப்போம். இவனைப் பற்றி ஸ்ரீமத் பாகவதத்தில் வருகிறது. பொதுவாக ஸனாதன தர்மத்தில் பொதுத் தொண்டு கிடையாது என்பது குற்றசாட்டு. க்ரிஸ்தவம் செய்கிறார் போல் எந்த தொண்டும் கிடையாது என்பர் சிலர். நமக்கும் அப்படித்தான் தோன்றும். உண்மையில் அப்படி இல்லை என்பது ரந்திதேவன் கதை மூலமாகவும், இன்னும் பல கதைகள் மூலமாகவும் அறியலாம். என்னவென்று பார்ப்போம்.

ரந்திதேவன் புகழ் பெற்ற ராஜா. பல யாகங்களைச் செய்தவன். ஒரு சமயம் பெரிய இஷ்டியை முடித்தான். எல்லாருக்கும் தன் பொருளை தானமாக வழங்கினான். தனக்கு மிச்சமில்லாமல் இருந்த வேளையில் சோதனை கொடிய பஞ்சரூபத்தில் வந்தது. தானும் தன் மனைவி, மக்களும் பிறர் கையை ஏந்த வேண்டிய கொடுமையான நிலை. அதிலும் ஒரு நல்லது நடந்தது, நம்மை இத்தனை நாள் காப்பாற்றிய அரசன் நன்றாக இருக்கும் பொருட்டு மக்கள் அவனுக்கு வேண்டிய கஞ்சியை அனுப்பி வைத்தனர்.

இப்படி ஒரு மண்டலம் கழிந்தது. ஒரு நாள் பகவதாராதனம் முடித்து கஞ்சி சாப்பிடும் நேரம் வந்தது. ஒரு யாசகன் அங்கு வர அவனுக்கு தன் பாகக் கஞ்சியை கொடுத்தான். மீண்டும் ஒரு யாசகன் வர அவன் மனைவி தன் பங்கைக் கொடுத்தாள். மூன்றாவது யாசகன் வர அவனுடைய பிள்ளைகள் தன் பங்கை அளித்தனர். ரந்தி தேவனும் அவன் மனைவி, பிள்ளைகள் கஞ்சி கூட குடிக்காமல் இருந்தபோது நீர் பருக நீரை எடுத்தஸமயம் ஒரு புலையன் நாய்களுடன் சாமீ தாகமாயிருக்கிறது என்று கேட்க தான் குடிக்கவிருந்த நீரையும் அவனுக்குத் தந்து விட்டு இரண்டு ஸ்லோகங்களைச் சொல்கிறான். பரோபகாரத்தின் உச்சம் என்றே சொல்லலாம். முதல் ஸ்லோகத்தைப் பார்ப்போம்.

ந காமயே அஹம் கதிம் ஈஸ்வராத்பராம்
அஷ்டர்தியுக்தாம் அபுனர்பவாம்
ஆர்த்திம் ப்ரபத்யே அகில தேஹ பாஜாம்
அந்த்ஸ்திதோ யேன பவந்தி அதுக்கா: ।।

அஷ்டமா சித்திகளை நான் வேண்டவில்லை. மறு ஜன்மா இல்லாத நிலையையும் வேண்டவில்லை. எல்லா ஜீவராசிகளின் உள்ளே இருக்கும், அவை அனுபவிக்கும் துன்பத்தை நான் அனுபவிக்க ஈஸ்வரனிடம் வேண்டுகிறேன். எவ்வளவு உயர்ந்த பண்பு. த்யாகத்துக்கு இதைவிட வேறு என்ன வேண்டும்? ஸ்வாமியை சரணம் அடைகிறேன் என்று கூறுவது போல கஷ்டத்தை சரணடைகிறேன் என்கிறான். இன்னொரு ஸ்லோகமும் சொல்கிறான். அது இதைவிட சிறந்தது. அது இப்போது வேண்டாம். கட்டுரையின் நோக்கம் இதற்கும் ஐ. எம். ஏ. வின் (இந்திய மருத்துவ கழகம்) ப்ரார்த்தனைக்கும் உள்ள தொடர்பு பார்ப்போம்.

"May everybody be happy May everyone of us see to it
That nobody suffers from any pain or sorrow
I do not ask for crown nor i wish to be in heaven or reborn.
I only want to alleviate the suffering of those people who are
Burning in fire of sorrow"

''எல்லாரும் மகிழ்ச்சியாக இருக்கட்டும். துன்பத்தினாலும் கவலையினாலும் யாரும் கஷ்டப்படாமல் இருக்க நாம் துணை புரிவோம். எனக்கு பெரிய ராஜமகுடமோ ஸ்வர்கவாசமோ, பிறப்பின்மையோ வேண்டாம். யாரெல்லாம் கஷ்டத்திலுள்ளார்களோ அவர்களின் கஷ்டத்தை நான் போக்க வேண்டும்.''

ப்ரார்த்தனை அப்படியே வரிக்குவரி ரந்திதேவன் சொன்னதன் மொழி பெயர்ப்பாக உள்ளது. ஆச்சார்யாமாகவும் உள்ளது. யாரோ ஒரு நல்ல மருத்துவர் இதை மருத்துவர்களின் நலனுக்காகவும் நோயாளிகளின் நலனுக்காகவும் மனமுவந்து சேர்த்திருப்பார் என்று நினைக்கிறேன். இன்றைய தேவையை உணர்ந்து செய்த செயலாக உள்ளது. எல்லா துறையிலும் ஸேவை மனப்பான்மை வேண்டுமென்றாலும் மருத்துவத் துறையில் அவஸ்யமாகவும் அதிகமாகவும் வேண்டும். ஸேவை செய்யாதவர்கள் இல்லை என்று கூறவில்லை. நிறைய மருத்துவர்கள் இருக்கிறார்கள். குறையக் கூடாது, அதிகமாக வேண்டும் என்பதே அவா. ப்ராக்டீஸ் ஆராம்பித்தவுடனே சேவை செய்ய வேண்டியதில்லை. கடமைகளை முடித்தபின் செய்தால் போதும். அந்த எண்ணம் வேண்டும். ரந்திதேவன் காட்டிய வழியில் ஐ.எம்.ஏ. ப்ரார்தனை இருப்பதை வாசகர்கள் இப்போது பார்த்திருப்பர். எப்பேர்பட்ட வழி? ஸனாதனமான வழி, ஸத்யமான வழி. இதை பின்பற்றினால் மருத்துவர்களுக்கு இல்லை பழி. Commercial கலாசாரம் போதையில் உலகம் இருக்கும் நிலையில் பின்பற்றுவது கடினமெனினும் முயன்றால் முடியாதது இல்லை என்று கூறிகொண்டு இவ்விதழை ஸ்ரீசரணர்களின் பொற்பாதத்தில் ஸமர்ப்பிக்கிறோம்.

# கீதை பிறந்தது எதற்காக?

## ஜகத்குரு பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்



तरतिशोकमात्ववित् ।

ஆத்மாவின் ஸ்வரூபத்தை உள்ளபடி அறிபவன் சோகத்தைத் தாண்டுகிறான் என்பது வேதப் பொருள். ஆத்மாவின் ஸ்வரூபத்தை உள்ளபடி அறிதலே ஞானம். அது ஒரு விதமாயிருக்க நாம் ஒருவிதமாய் நினைத்துக் கொண்டிருப்பதே மோஹம். மோஹத்தைக் களைந்து விட்டால் சோகம் தானாக வீழ்ந்து விடும். பகவான் அர்ஜுனனுக்கு ஆத்ம ஞானத்தையுபதேசிக்கத் தொடங்கினார். அந்த உபதேசத்தின் முதல் வாக்யத்திலும் பகவான் அர்ஜுனனை திட்டுவதை விடவில்லை; "நீ அறிவுள்ளவனாகவிருந்தால் இப்படி அழ மாட்டாய்" என்கிறார். नानुशोचन्ति पण्डिता: । (2.11) அந்த அறிவு என்னவென்பதை அடுத்த வாக்கியத்தின் முதலில் சொல்லுகிறார்.

नत्वेवाहं जातुनासम् । என்று ஆரம்பித்து (2.12)

अच्छेद्योऽयं अदाह्योऽयं अक्लेद्योऽशोष्यएवच ।

नित्य: सर्वगत: स्थाणु: अचलोयं सनातन: ।। (2.24)

अव्यक्तोऽयं अचिन्त्योऽयम अविकार्योयमुच्यते ।

तस्मादेवं विदित्वैनं नानुशोचितुमर्हसि ।। (2.25)

என்று பதினோராவது ச்லோகம் முதல் 26-வது ச்லோகம் வரையில் ஆத்மக்ஞான உபதேசம் செய்கிறார். ஆத்மா எங்கும் நிறைந்தவன், எங்குமுள்ளவன், அழிவற்றவன், எங்கும் நிறைந்த பொருளாதலால் அசைவற்றவன். அப்படியிருக்க ஆத்மாவை ஒருவன் கொல்லுகிறான். ஆத்மா கொல்லப்படுகிறான், என்ற மோஹத்திற்கு இடமேது? ஆகையால், एवं विदित्वा, இப்படிப்பட்ட உண்மையை அறிவதனால் சோகத்தை அகற்று என்று அறிவைக் கொண்டு சோகத்தை அகற்ற உத்தேசிக்கிறார் பகவான். வேறு எந்த வழியிலானாலும் சோகத்தை அகற்றுவதே பகவானுடைய பரம உத்தேசம்; ஆனாலும் வேறு வழிகள் சோகத்தை அடியோடு களையப் பயன்படாதன. ஆகையால் विदित्वा என்னும் ஞானமார்க்கத்தைப் பகவான் கையாண்டார். ஆனாலும் வேறு வழிகளை கொண்டிருப்பவனிடம் ஆசையற்ற யோகிகளுக்கு உபதேசிக்க வேண்டிய ஆத்ம ஞானத்தை உபதேசித்தால் அது அப்பொழுது பயன்படாது என்பது பகவானுக்குத்

தெரியும். ஆயினும் எடுத்தவுடனே ஆத்ம ஞானத்தை உபதேசித்ததற்குக் காரணம் என்னவென்றால் எடுத்தவுடனே சொல்லும் வார்த்தைதான் கடைசி வரையில் நினைவில் நிற்கும். அது புரிந்து அனுபவத்திற்கு வராவிட்டாலும் கடைசி வரையில் நினைவில் ஊறிக் கொண்டேயிருக்கும். அவனுக்குப் பக்குவத்தை அடைவித்ததன் பின்னர் முதலில் உபதேசிக்கப்பட்ட ஆத்ம ஞானமும் பயன்தரும் நிலைக்கு வரும் இவ்வித உத்தேசத்தைக் கொண்டே முதலில் ஆத்ம ஞானத்தை அறிவித்து விட்டு அவனுடைய சோகத்தை அகற்ற வேறு வழிமுறைகளையும் பகவான் உபதேசிக்கிறார். ஆனால் வேறு முறைகள் சோகத்தை அகற்றக்கூடியனவா? வேரோடு களைய முடியாது என்று பகவானுக்குத் தெரியும். மலேரியா வியாதிக்கு உயர்ந்த ஆயுர் வேத மெழுகுகளைக் கொடுத்துத்தான் வியாதியை அகற்ற வேண்டும். ஆயினும் ஜ்வரம் இருக்கும் போது மெழுகு கொடுத்தால் பிடிக்காது. ஜ்வரத்தைக் கொஞ்சம் குறைத்துக் கொண்டுதான் உயர்ந்த பிரயோகங்களைச் செய்ய வேண்டும். தற்கால சாந்திக்காக மலைவேம்புக் கஷாயம் முதலிய சாமானிய பிரயோகங்களைச் செய்து ஜ்வரத்தைக் குறைத்துக் கொண்டு பின்னர் வியாதியை வேரோடு களையும் பிரயோகங்களைச் செய்ய வேண்டும்.

ஆதலால் 25வது ச்லோகத்திற்கடுத்த இரண்டு ச்லோகங்களில் பகவான் வெறும் உலகப் போக்கை அங்கீகரித்துக் கொண்டு அம்முறையிலேயே அவனுடைய சோகத்தைக் குறைக்க உபதேசம் செய்கிறார். "மனிதன் பிறந்தால் பிறந்தது; செத்தது. முன்புமில்லை; பின்புமில்லை" என்று நினைப்பாயானாலும் சோகமடைவதற்கு இடமில்லை என்கிறார் பகவான். சரீரத்தை விட வேறான ஆத்மா இருக்கிறான். சரீரம் இவ்வுலகத்தில் மரித்த பின்னரும் அவன் தன் நற்கர்மங்களுக்கும்; தீய கர்மங்களுக்கும் தகுந்தவாறு வேறு உலகங்களை அடைந்து இன்பத்தையோ, துன்பத்தையோ அனுபவிக்கிறான். அவன் என்றும் அழிவதில்லை என்பது தர்ம நூல்களின் கொள்கை. ஞான நூல்களின் கொள்கையோ வெனில்:

நீ சாகின்றான் என்று எவனை நினைக்கிறாயோ அவன் நாசத்தையடைவதேயில்லை. அதைத் தீர்மானமாக அறிந்து கொள். பார்க்கப்படும் எல்லாம் எந்த ஒரு பொருளால் நிறைந்திருக்கிறதோ அதுவே அந்த ஆத்மா.

नित्यस्सर्वगतस्थाणु: अचलोयं सनातन: ।। 2.24

என்கிற நீ சாகிறான் என்று நினைக்கும் ஆத்மா எங்கும் நிறைந்த பரம்பொருளே.

(தொடரும்)

# நீதிக் கதைகள்

## ஜகத்குரு பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

## ரந்தி தேவர்

**பிறர் துயரை நீக்குவதே அருஞ்செயல்**



***இறைவன் என் எதிரில் தோன்றினால், மறுபிறப்பின்மையோ, செல்வத்தையோ, புகழையோ கேட்க மாட்டேன். பிறர் உள்ளத்தினுள் நுழைந்து அவர் உள்ளத்தில் புதைந்துள்ள துயரை நீக்கி அவர்களது கண்ணீரைத் துடைக்கின்ற சக்தி பெறுவேன். - பாகவதம்***

ரந்திதேவன் என்ற அரசனது ஆட்சியில் மழையின்றிப் பஞ்சம் ஏற்பட்டது. உண்ண உணவின்றிப் பருக நீரின்றி மக்கள் வாடினர். அரசரது பண்டக சாலையிலும் பொருள் ஏதுமில்லை. அரச குடும்பத்தினரும் பட்டினி கிடந்தனர். 48 நாட்களுக்குப் பின் ஒருநாள் சிரமப்பட்டு ரந்திதேவர் தன் குடும்பத்தினருக்குக் கஞ்சி தயாரித்தார். அவரும் குடும்பத்தினரும் உணவேற்கும் வேளையில் ஒரு பிராமணன் வந்தார். வந்தவரை இறைவனாக எண்ணி ஒரு பகுதியை அவருக்கு அளித்தார். பிராமணன் அகன்றதும் ஒரு வேளாளர் வந்தார். அவருக்கும் ஒரு பகுதியைத் தந்தார். மறுபடி உண்ண முற்பட்ட போது நாய்களுடன் ஒரு சண்டாளன் உணவைக் கேட்டான். அவர்களுக்கு மீதமிருந்த உணவைத் தந்தபின், மீதமிருந்த குடிநீரைப் பருக நினைத்த போது ஒரு புலையன் வந்தான். குடிநீரைக் கேட்டான். வந்தவர் ஹரி என நினைத்து அந்த குடிநீரையும் அவருக்குத் ஈந்தார்.

பஞ்சத்தின் கொடுமையால் பசியும், தாகமும் தரும் துன்பத்தை அரசன் தானே உணர நேர்ந்தது. பின் அந்தக் கொடுமையால் படும் துயரைத் துடைப்பதே அரசனின் கடமை என உணர்ந்த அரசர் தனக்கென எதனையும் கொள்ளாமல் அனைத்தையும் ஈந்தார். இந்த அரசரது சிறப்பால் மகிழ்ந்த தேவர்கள் நேரில் தோன்றி வரம் கேட்க வேண்டினர். அரசன் வேண்டிய வரம் "மக்களின் துயரத்தை உணர்ந்து அதனைத் துடைப்பதே என் கடமை என்ற உணர்வு

என்னிடம் மறையாதிருக்கட்டும்'' என்பதே.

பிறர் துயரை நீக்க முற்படும் போது நம் துயர் பொருட்படுத்த வேண்டாத அளவிற்குக் குறைகிறது. சில சமயம் நமது துயர் நம் நினைவிற்கே வருவதில்லை. பிறர் துயர் நீங்கி சுகமாக இருப்பதைக் காண்பதில் ஏற்படுகின்ற மகிழ்ச்சி அளவில் அடங்காததாகிறது.

# மரத்தின் திமிர்

**''தன்னை விட வலிவு மிக்கவனிடம் அடங்கிப் போவதே நல்லது. அவனோடு மோதுவது சாகசச் செயல் அது நிலை குலையச் செய்யும்''**

சாலையோரத்தில் நன்கு வளர்ந்த ஒரு பெரு மரம் இருந்தது. கப்பும் கிளையும் தழையுமாக அது புஷ்டியுடன் காணப்பட்டது. அதன் நிழலில் பலர் தங்கி இளைப்பாறிச் செல்வர். பறவைகள் நூற்றுக்கணக்கில் அதன் பொந்துகளிலும் கிளை மறைவிலும் கூடுகட்டி இனிது வாழ்ந்தன. மரத்திற்குத் தன் நிலை கண்டு பெரிதும் பெருமை ஏற்பட்டது.

அதன் அடியில் ஓர் அறிவாளி இளைப்பாற வந்தான். அவன் மரத்தை உற்று நோக்கினான். ''இந்த மரத்தில் சுள்ளிகள் இல்லை. கிளைகள் காற்றால் முறியக் காணோம். காற்று இதனிடம் மிகவும் அன்புடன் இலைகளைத் தழுவிச் சலசலக்கச் செய்கிறது. மற்ற மரங்களைப் போலில்லாமல் இது தழைத்து ஓங்கி வளர்ந்துள்ளது. காற்றுக்கும் இதற்கும் உள்ள நட்பு பாராட்டத்தக்கது. காற்றின் உதவியுடன் இந்த மரம் பல்லாண்டுகள் வாழட்டும்'' என்று சொல்லிச் சென்றான்.

மரம் இதனைக் கேட்டது. அவன் தன்னை சிறுமைப்படுத்தி விட்டதாக நினைத்தது. ''காற்று தன்னை ஒன்றும் செய்ய இயலாது. காற்று தன்னுடன் மோத வந்தால் தன் வலுவை இழந்து அடங்கிவிடும். காற்றை நான் மதிப்பதே இல்லை. காற்றுடன் நட்பு என்பது வெட்கக்கேடு. என் ஒரு இலையைக் கூட அதனால் உதிர்க்க முடியாது. நான் காற்றிடம் பயப்பட மாட்டேன்.'' என்றவாறு எண்ணத் தொடங்கியது.

காற்று இதனை உணர்ந்தது ''நான் மரங்களுக்கு உயிர் ஊட்டுகிறேன். என்னால் மரங்களைத் தழைத்து வளரச் செய்ய இயலும். இலைகளை உதிர்த்துக் காய்ந்து பட்டுப் போகச் செய்யவும் இயலும். நான் அமைதியுடன் அசையும் போது மரங்கள் தளிர் விடுகின்றன. நான் சாந்தியின்றி வேகமாக வீசும் போது மரங்கள் மட்டுமல்ல, மலைகளுமே சிதறுகின்றன. மரம் அறியாமையால் தான் வலுவுள்ளவன் என இறுமாப்புடன் உள்ளது. காற்று முன்போல் மெல்ல மரத்தை அணைத்தது. மரம் அதனை அவமதிப்பது போல் இலைகளைக் கூட அசைக்காமல் விறைப்பாக நின்றது.

அன்றொரு நாள் மரத்தடியில் நின்ற அறிவாளியான மனிதன் ''இன்று

பெருங்காற்று வீச இருக்கிறது. மரத்தினடியில் நிற்பது கூட ஆபத்தை விளைவிக்கும்'' என்று கூறிவிட்டு வேகமாக சென்றான்.

மரம் உற்று வெளியே பார்த்தது. காற்று வலுத்து வீசிற்று. பெரும் மரங்கள் ஆடின. சூறாவளிக் காற்றால் மரங்கள் வேர் விட்டுப் பெயர்ந்து சாய்ந்தன. இந்த மரத்திற்கு நடுக்கம் ஏற்பட்டது. காற்றின் வேகத்தைத் தன்னால் தாங்க முடியாதென்பதை உணர்ந்தது.

அதற்குள் பெருங்காற்றில் இலைகள் உதிர்ந்தன. சடசடவென கிளைகள் முறிந்தன. மரம் வேருடன் ஆடத் தொடங்கிற்று. தலையில் ஓரிரு கிளைகள் மட்டுமே நின்று பேயாட்டம் ஆடின. மரம் காற்றை அக்கிளைகள் மூலம் வணங்கிற்று. "காற்றே! நீ வலிவு மிக்கவன். உன் எதிரே நான் ஒரு துரும்பிற்குச் சமம் என்பதை உணர்கிறேன். என் திமிர் அடங்கியது. என்னை உருக்குலைத்தது போதும். என்னை விட்டு விடு. என்னை விட வலுவில் மிகுந்தவனான உன்னுடன் மோத முற்பட்டேன். அதற்கேற்ற தண்டனையை அனுபவிக்கிறேன்'' என வேண்டியது காற்றும் அடங்கியது. மறுபடியும் மரம் காற்றின் இனிய அணைப்பில் தழைத்து நின்றது.

(தொடரும்)

## ஸனாதன தர்மப்புதிர்கள் ஜூன் விடைகள்

1. சந்தோமயம் (வேதஸ்வரூபம்)
2. அஜோமுகி
3. சுரேஸ்வரர், தோடகர், பத்மபாதர், ஹஸ்தாமலகர்
4. கும்பகோணம்
5. சதமானம் பவதி
6. ராம்டேக்
7. திருமுருகாற்றுப்படை
8. ஆனைமலை
9. ஜ்வரஹரேஸ்வரர்
10. மகாபாரதம்

## ஸனாதன தர்மப்புதிர்கள் ஜூலை வினாக்கள்

1. வைகாசி சுக்ல நவமி விசேஷம் என்ன?
2. ஆவுடையார் மீது நிற்கும் திருமால் எவ்வூரில் உள்ளார்?
3. அம்பாளின் அர்தநாரீ பீடம் எங்குள்ளது?
4. மா சுச: இந்த கீதா வாக்யம் எந்த விக்ரஹத்தில் உள்ளது?
5. பிரம்மபுத்ரா நதீ எங்கு உத்பத்தியாகிறது
6. நவ மட நாதர் யார்?
7. வைதிக மதத்தின் ப்ரதான அம்சம்
8. ஆசு தோஷி என்பவர் யார்?
9. விஷ்ணு ஸஹஸ்ரனாமத்தின் வைஷ்ணவ உரை எழுதியவர்
10. தமிழ் நாட்டில் உள்ள ஜோதிர்லிங்கஸ்தலம்.

# VEDANTIC PRAYER

## SRUTIGITA

The following verses, brimming with poetic beauty and devotional fervour, are composed by Sridharasvamin in the course of his illuminating *tika* (gloss) on the first thirty stanzas of the *Srutiglta.* They are reproduced here with an English rendering for the benefit of the readers, so that they may easily grasp the meaning of the succinct *Srutiglta.*

मूकं करोति वाचालं पङ्गुं लङ्घयते गिरिम् ।
यत्कृपा तमहं वन्दे परमानन्दमाधवम् ।। १ ।।

1. I bow down to that embodiment of supreme Bliss, the Master and Mother of the universe, by whose grace the dumb are adorned with the power of (beautiful) speech and the halt are enabled to scale (even) mountains.

जय जयाजित जष्यगजङ्गमावृतिमजामुपनीतमृषगुणाम् ।
न हिभवन्तमृते प्रभवन्त्यमी निगमगीतगुणार्णवता तव ।। २ ।।

2. O Lord, be victorious ! Your infinite Splen-dour is sung'by all the Vedas. Be gracious to me and reveal Your glory by outstepping the bounds (lit. by conquering the qualities) of *maya* (which obstruct the knowledge of *brahman* among the devo-tees). Except You there is no one efficient enough to save the world from the thraldom of *maya.*

द्रुहिणवहनिरवीन्द्रमुखामरा जगदिदं न भवेत्ब्रुतक् उपस्तितम् ।
बहुमुखैरपि मन्त्रघणैस्त्वमुरुमुर्तिरतो बिनिगद्यसे ।। ३

3. The mention of different gods like Brahma, Vahni (fire), Ravi (Sun), Indra. etc. separately in the Vedas does not mean that the world is ruled by someone other than You. This (only) indicates that You alone are referred to variously (in the Vedas to suit the differing temperaments of aspirants).

सकलवेदगणेरितसङ्ग गस्त्वभिति सर्वमनीषजना रता: ।
त्वयिसुभ्द्रगुणश्रवणादिस्र्भितव पदस्मरणेन गतल्लमा : ।। ४ ।।


4. The wise sages have understood that the vari-ous gods (worship and) praise You only ; they are (seen to be) happy in glorifying You and are content by the constant remembrance of Your lotus-feet.

# ÿ B a\õº¯õÒ •Põ®

## பூஜ்யஸ்ரீ ஸங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

*ஸ்ரீமடம் முகாம் வேளச்சேரியில் 30.05.2019 முதல் 04.06.2019 ஸ்ரீ தத்த பீடம் ஸ்ரீ கணபதி சச்சிதானந்த ஆஸ்ரமத்தில் வெகுவிமரிசையாக நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் தினமும் தரிசனம் செய்து கொண்டு பிக்ஷாவந்தனம் / பாதபூஜை செய்தார்கள்.*

*பெசன்ட் நகர் கலாக்ஷேத்ரா வளாகத்தில் ஜூன் 2ம் தேதி நடைபெற்ற விழாவில் ‘‘உத்தங்கிதா’’ புத்தகத்தின் 11வது பாகம் வெளியிடப்பட்டது. இவ்விழாவில் தமிழ்நாடு மேதகு ஆளுநர் பன்வாரிலால் புரோகித் அவர்கள் தலைமை தாங்கி புஸ்தகத்தை வெளியிட்டு சிறப்புரை வழங்கினார்கள். நிகழ்ச்சியில் புதுதில்லி இந்திராகாந்தி தேசிய கலாச்சார மையத்தைச் சேர்ந்த திரு சச்சிதானந்த ஜோஷி, தொல்லியல் துறை முன்னாள் தலைவர் திரு. நாகசாமி மற்றும் கலாக்ஷேத்ரா தலைவர் திரு. என்.கோபால்சாமி ஆகியோர் பங்கு பெற்று உரையாற்றினர். விழாவில் பேசிய ஆளுநர் அவர்கள் பழம்பெரும் பொக்கிஷங்களை பாதுகாக்கும் ஸ்ரீமடத்தின் பணியை வெகுவாக பாராட்டினார்கள்.*



*பெசண்ட் நகர் ஸ்ரீ ரத்னகிரீஸ்வரர் ஆலயத்தில் 10 நாட்கள் நடைபெற்ற வருண ஜபத்தின் இறுதி நாளான ஜூன் 2ம் தேதி பர்ஜன்ய ஹோமத்தை துவக்கி வைத்து ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் அனுக்ரஹித்தார்கள். இந்த வைபவத்தில் காலை வேளையிலும் ஏராளமான பக்தர்கள் பங்குபெற்று ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகளின் அனுக்ரஹத்தைப் பெற்றார்கள்.*

மேலும் வேளச்சேரி பகுதியில் உள்ள ஸ்ரீ சுந்தரவிநாயகர் ஆலயம், நவசக்தி விநாயகர் ஆலயம் ஸ்ரீ தண்டீஸ்வரர் கோவில் ஆகியவற்றிற்கு விஜயம் செய்து அங்கு குழுமியிருந்த பக்தர்களிடையே அனுக்ரஹ பாஷணம் வழங்கினார்கள்.

ஜூன் மாதம் 4ம் தேதி மாலை வேளச்சேரியிலிருந்து கிளம்பிய ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் அடுத்து திண்டிவனம் பாண்டிச்சேரி நெடுஞ்சாலையில் உள்ள ஓமந்தூர் கிராமத்தில் உள்ள ஸ்ரீராம் பள்ளியில் தனது முகாமைத் தொடர்ந்தார். ஸ்ரீராம் பள்ளியின் தாளாளர் திரு. முரளி ரெட்டியார் சிறப்பான ஏற்பாடுகளை செய்திருந்தார். அந்த பள்ளி வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த சிறப்பு அரங்கில் ஜூன் மாதம் 5ம் தேதி முதல் 10ம் தேதி வரை ''வ்யாஸ பாரத வேத ஆகம சில்ப கலாதி சதஸ்'' என்னும் இந்து சமய கலை மற்றும் கலாச்சார விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. வேதபாராயணம், வேத பண்டிதர்கள் பங்குபெற்ற சதஸ், பாஞ்சராத்ரம், வைகானச ஆகம சாஸ்திரங்கள் படித்த அறிஞர்கள் பங்குபெற்ற கலந்துரையாடல்கள் மிகவும் பயனுள்ளதாக அமைந்தது. கோயில்களில் எந்தெந்த நேரத்தில் எந்தெந்த ராகம் இயக்கப்பட வேண்டும் என்ற சாஸ்திர விதிமுறைகள் விவாதிக்கப்பட்டு அதற்கேற்ப நாதஸ்வர வித்வான்கள் அந்த ராகத்தை இசைத்தது மிகவும் பயனுள்ளதாக இருந்தது.

புர்ர கதா தெலுங்கு, பொம்மலாட்டம் மற்றும் வில்லுப்பாட்டு போன்ற கலை நிகழ்ச்சிகள் பார்வையாளர்களை மிகவும் கவர்ந்தன. இந்த ஸதஸில் ப்ரசித்தி பெற்ற பேச்சாளர்கள் கலந்து கொண்டு மிகவும் உபயோககரமான விஷயங்களை எடுத்துரைத்தார்கள்.

ஆயுர்வேதம், திருக்கோயில்கள் பற்றிய கண்காட்சியும் ஏனாத்தூர் ஸ்ரீ சங்கரா கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் புத்தகக் கண்காட்சியையும் பொது ஜனங்கள் கண்டுகளித்தார்கள்.

சதஸின் இறுதி நாளான ஜூன் மாதம் 10ம் தேதி திண்டிவனத்திலிலுள்ள சிவன் கோவில் முதல் ஸ்ரீ லக்ஷ்மி நரசிம்மர் ஆலயம் வரை பிரம்மாண்ட ஊர்வலம் நடைபெற்றது. ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் இந்த ஊர்வலத்தை தொடங்கி வைத்து வழி முழுதும் நடந்தே வந்தார்கள். ஊர்வலத்தில் ஏராளமானோர் பங்குபெற்றது மட்டுமல்லாமல் களியாட்டம், கரகாட்டம், மயிலாட்டம், ஒயிலாட்டம், தப்பாட்டம், கோலாட்டம், சிலம்பாட்டம், புலி ஆட்டம், பம்பை, உடுக்கை, கை சிலம்பு ஆகிய சிறப்பு கலை நிகழ்ச்சிகளையும் கண்டு களித்தார்கள்.விழாவின் இறுதியாக ஊர்வலம் முடிந்த திண்டிவனம் பெருமாள் கோவிலில் மாபெரும் பொதுக்கூட்டம்

*நடைபெற்றது. இதில் முனைவர் திரு. நாகசாமி, விஸ்வ ஹிந்து பரிஷத் தலைவர் திரு.வேதாந்தம் முதலியோர் பங்கேற்று சிறப்புரை ஆற்றினார்கள். ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் அவர்களின் அனுக்ரஹ பாஷணத்துடன் விழா இனிதே நிறைவுற்றது.*

*இதனிடையே திண்டிவனம் அருகே உள்ள ஆலக்ராமம் என்ற ஊரில் உள்ள ஸ்ரீ சுந்தர விநாயகர் திருக்கோவிலின் கும்பாபிஷேகத்தை ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் தனது திருக்கரங்களால் நடத்தி வைத்தார்கள்.*

*11.06.2019 அன்று மாலை ஸ்ரீமடம் முகாம் ஓமந்தூரிலிருந்து புறப்பட்டு ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் அடுத்த முகாமிற்காக திருவண்ணாமலையை அடைந்தது. திருவண்ணாமலையில் ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகளுக்கு பிரம்மாண்டமான வரவேற்பு அளிக்கப்பட்டது. முகாமிற்கான ஏற்பாடுகளை ஸ்ரீமடம் திருவண்ணாமலை கிளையின் பொறுப்பாளர்கள் திரு. கோபாலகிருஷ்ண ராவ் மற்றும் ஸ்ரீ கணபதி ஆகியோர் மிகவும் சிரத்தையாகவும் சிறப்பாகவும் செய்து கொடுத்தார்கள்.*

*திருவண்ணாமலையில் 15.06.2019 அன்று மாலை கிரிவலம் வந்த ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் வழியில் ஸ்ரீ தயானந்த சரஸ்வதி ஸ்வாமிகளால் துவக்கப்பட்டு தற்சமயம் ஸ்ரீ ஓம்காரானந்தா ஸ்வாமிகளால் வழிநடத்தப் படும் தர்மரக்ஷண ஸமிதியின் வளாகத்திற்குச் சென்று ஜவ்வாதுமலையில் நட்டு பராமபரிக்கபட்டு வளர்ப்பதற்கு சுமார் 1000 சந்தனக் கன்றுகளை விநியோகித்து அனுக்ரஹம் செய்தார்கள். அவ்வாறே தனி நபர் ஒருவரால் நடத்தப்படும் கோசாலைக்கும், நாதஸ்வர வித்வான் திரு. கூ. பிச்சாண்டி அவர்களால் நடத்தப்படும் நாதஸ்வர பாடசாலைக்கும் விஜயம் செய்தார்கள். பின்னர் முகாமிற்கு திரும்பிய ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் அங்கு குழுமியிருந்த உள்ளூரைச் சேர்ந்த ப்ராம்மண ஸமுதாய ஆசிரியர்கள் மற்றும் வைதீகர்கள் இடையே அனுக்ரஹ பாஷணம் வழங்கினார்கள். பௌர்ணமியையொட்டி சஹஸ்ரசண்டி பாராயணமும், ஹோமமும் நடைபெற்றது. அதன் பூர்ணாஹுதியில் பங்கேற்று ஆசீர்வதித்தார்கள்.*

*ஸ்ரீ பெரியவாள் அவர்கள் 2019 ஜூன் மாதம் 17ம் தேதி இரவு 8.30 மணி அளவில் ஸ்ரீ சந்த்ரமௌலீச்வரர் பூஜையுடன் திருவானைக்காவல் வந்தடைந்தார். வழிபூராவும் அக்ரஹாரவாஸிகள் அவரவர் க்ருஹத்தில் பூர்ணகும்ப மரியாதை செய்தார்கள். ஸ்ரீமடத்தில் பிள்ளையார் கோவிலில் வழிபட்டு பக்தர்களுக்கு தரிசனம் கொடுத்து அருளாசி வழங்கினார்கள்.*

*18.06.2019 அன்று ஸ்ரீ சந்த்ரமௌலீஸ்வரர் பூஜையை முடித்துக் கொண்டு மாலை அருகிலிலுள்ள குணசீலம் வெங்கடேச்வரஸ்வாமி கோவில் பாலாலய நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார்கள். வைகானஸ ஸம்ப்ரதாய பட்டாச்சார்யார்கள் ஸ்ரீ பெரியவாள் அவர்களை வரவேற்று கர்ப்பக்ருஹத்தில் விசேஷ பூஜைகள் செய்து ப்ரஸாதம் அளித்து ஆசி பெற்றார்கள். பிறகு அங்கேயே அருகிலிருக்கும் ஹேமவர்ணேச்வரி சமேத தார்மீகநாத ஸ்வாமி கோவிலுக்கு விஜயம் செய்தார்கள்.*

*19.06.2019 அன்று மாலை பூஜைகளை முடித்துக் கொண்டு மெலட்டூர் விஜயம் செய்தார்கள். நரசிம்ம ஜயந்திக்கும் பாகவத மேளாவுக்கும் பிரசித்தி பெற்ற ஊர் மெலட்டூர். கிராமத்தின் எல்லையில் நாதஸ்வரம் முதலிய வாத்யங்களுடன் வரவேற்பு அளிக்கப்பட்டன. அந்த இடத்திலேயே கால்நடையாகவே வழியில் அக்ரஹாரவாசிகள் அளித்த பூர்ணகும்ப மரியாதையை ஏற்றுக் கொண்டு ஸ்ரீ பெருமாள் கோவில் வந்தடைந்தார்கள். பிறகு அங்கிருந்த வேதபாடசாலை வந்து மூத்த வித்வான்கள் பாடசாலை அத்யாபகர்கள் முதலானவர்களை ஆசீர்வதித்தார்கள்.பிறகு உன்னதபுரீஸ்வர ஸ்வாமி சிவன் கோவிலுக்கு வந்து தரிசித்து தக்ஷிணாமூர்த்தி விநாயக ஸ்வாமி கோவிலை அடைந்தார்கள். அந்த கோவிலுக்கு மறுநாள் விஜயம் செய்த ஸ்ரீ பெரியவாள் கும்பாபிஷேகம் பூர்ணாஹுதியைத் தொடர்ந்து அனுக்ரஹ பாஷணம் அருளினார்கள். களஞ்சேரி பாடசாலை வழியாக ஸ்ரீமடம் முகாமிற்கு இரவு 11.00 மணி அளவில் வந்து சேர்ந்தார்கள்.*

*20.06.2019 அன்று மதியம் அகிலாண்டேஸ்வரி அம்மனுக்கு உச்சிகால அபிஷேகம் தன் கரங்களினாலேயே செய்தார்கள். ஆலாவட்டம் என்ற சம்பிரதாய சடங்கில் - இது தினமும் நடைபெறுவது (உடன் இருந்தார்கள்). இதில் முறை பண்டிதர் அம்பாள் அலங்காரத்திலிருந்து புறப்பட்டு ஜம்புநாதஸ்வாமி சன்னதி அடைகிறார். ஜம்புநாத ஸ்வாமிக்கு உச்சி கால அபிஷேகத்தை தன் கரங்களினாலே செய்தார்கள். ஈஸ்வரன் சன்னதியில் பூஜை முடிந்த பிறகு பண்டிதர் அகிலாண்டேஸ்வரி சந்நிதி வந்தடைந்தார்கள். பிறகு அம்பாளுக்கு உச்சிகால தீபாராதனை செய்யப்படுகிறது. இந்த ஆலாவட்டத்தில் பூராவும் ஸ்ரீ ஸ்வாமிகள் பக்தர்கள் புடைசூழ பங்கேற்றார்கள்.*

*22.06.2019 மூன்று கால பூஜையை முடித்துக் கொண்டு திருவானைக் காவலிலிருந்து புறப்பட்டு இரவு 8.00 மணி அளவில் இளையாத்தங்குடி வந்தடைந்தார்கள். ஊர் எல்லையில் பூர்ணகும்ப மரியாதையுடன் வரவேற்பு அளிக்கப் பட்டது. உடனே ஸ்ரீ கைலாசநாத ஸ்வாமி கோவில் எதிரில் அமைக்கப்பட்டிருந்த*

மஹாஸ்வாமி மூர்த்தி பிரதிஷ்டையை முன்னிட்டு யாகசாலைக்கு விஜயம் செய்து பூர்ணாஹுதி செய்து அனுக்ரஹ பாஷனம் அருளினார்கள். காஞ்சி மடத்திற்கும் இளையாத்தங்குடிக்கும் இடையே உள்ள சம்பந்தத்தையும் முக்யத்வத்தைப் பற்றியும் விரிவாக எடுத்துரைத்தார்கள். இளையாத்தங்குடியில் 1961/62ல் நடந்த முதலாவது வியாஸ பாரத ஆகம சில்ப சாஸ்திர சதஸ் பற்றியும் அது சமயம் ஸ்ரீ ஜயேந்த்ர சரஸ்வதி ஸ்வாமிகள் உடன் இருந்ததையும் உருக்கமாக நினைவுகூர்ந்தார்கள். 23.06.19 அன்று ஸ்ரீ காமகோடி பீடத்தின் 65வது பீடாதிபதி ஸ்ரீ சுதர்ஸன மஹாதேவேந்த்ர சரஸ்வதி ஸ்வாமிகள் அதிஷ்டான கும்பாபிஷேகத்தை செய்தார்கள்.பிறகு ஸ்ரீ மஹாஸ்வாமிகளுக்கு ஊரணிக் கரையில் அமைக்கப் பட்டுள்ள மண்டபத்தில் சிலாமூர்த்திக்கும் கும்பாபிஷேகம் செய்தார்கள். 25.06.19 இரவு இளையாத்தங்குடியிலிருந்து புறப்பட்டு ஒருநாள் விஜயமாக திருவானைக்காவல் வந்து 27.06.19 அன்று காலை தஞ்சாவூர் திருமலைசமுத்ரம் சாஸ்திரா பல்கலைக் கழக வளாகத்திற்கு ஸ்ரீ சந்த்ரமௌலீச்வர் பூஜையுடன் வந்தடைந்தார்கள்.

(தொடரும்)

ஜய ஜய சங்கர உ ஹர ஹர சங்கர

ஸ்ரீ

தர்மோ ரக்ஷதி ரக்ஷித:

## ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம்

### சீடர்களின் கவனத்திற்கு

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகளின் சீடர்களாகிய நாம் நமது குடும்பத்தில் அவ்வப்பொழுது நடைபெறும் சுபநிகழ்ச்சிகளுக்கு பத்திரிகைகள் தயார் செய்யும்போது
கீழ்க்கண்ட வாசகங்களை முதலில் அமைப்பது சாலச்சிறந்ததாகும்.

‘‘ஸ்ரீ மஹா த்ரிபுரசுந்தரி ஸமேத ஸ்ரீ சந்திர மௌலீஸ்வர ஸ்வாமி க்ருபையுடன்,
ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாள் பரம்பராகத மூலாம்நாய ஸர்வக்ஞபீடம்
ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சங்கராச்சார்ய
ஸ்வாமிகள் பரிபூரண அனுக்ரஹத்துடன்’’



# திருக்குறள் நூற்றெட்டு

ப்ரதீபப் பேழை

திருக்குறளிலிருந்து தொகுக்கப்பட்டது.
ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளான
ஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள்
அனுக்ரஹித்த திவ்ய ஸ்ரீமுகத்துடன் கூடியது.

## 87. அந்தணர் நூற்கு மறத்திற்கு மாதியாய்
## நின்றது மன்னவன் கோல்

*மன்னவன் கொல் = அரசனுடைய செங்கோன்மை அந்தணர் நூற்கும் = வேதத்திற்கும், அறத்திற்கும் = (அதனால் அறியப்படும்) தர்மத்திற்கும், ஆதி = காரணம் ஆய் = ஆகி நின்றது.*

*அரசன் செங்கோலன் ஆக இல்லாவிடில், பிராம்மணர் முதலியோர் வேதங்களை அத்யயனம் செய்யார். அப்போது வேதங்களை அவர் அறியார். அப்போது வேதங்களின் பூர்வகாண்டம் கூறும் இல்லறத்தையும் உத்தரகாண்டம் , கூறும் துறவறத்தையும் அவர் அறிதற்கு இடம் இல்லாமற் போகும். ஈண்டுக் கூறப்பட்ட அந்தணர் நூலும் தொல்காப்பியனார் கூறும் அந்தணர் மறையும் ஒன்றே இக்குறளால் இந்நூலாசிரியர் வைதீக மதத்தினர் என்பது வெளிப்படை.*

*துறவறத்திலுள்ளோரையே அந்தணர் என இந்நூலாசிரியர் அந்தண ரென்போர் அறவோர் மற் றெவ்வுயிர்க்கும் செந் தண்மை பூண்டொழுகலான் என்ற குறளிற் கூறியிருப்பினும், இக்குறளில் அச்சொல் இல்லறத்திலுள்ளோரையுங் குறிக்கும். அவ்வழகு "அந்தி யந்தணரை ரருங்கடனிறுக்கும்" என்ற புறநானூற்றடியிற் காணப்படுகிறது. "பிராம்மணன்" என்ற சொல் சிறப்பாக சன்யாசியையே குறிக்கும் என மகாபாரதத்தில் கூறப்பட்டதும் நோக்கத்தக்கது.*

*அறம் என்றது இல்லறம், துறவறம் இரண்டையும் குறிக்கும். வேதம் அரசர்க்கும், வணிகர்க்கும் உரித்தாதலின் அந்தணர் நூல் எனக் கூறுவது பொருந்துமா எனின் அது தலைமைபற்றி வந்த வழக்கு எனக் கூறுவார் பரிமேலழகர்.*

## 88. ஆபயன் குன்று மறுதொழிலோர் நூன் மறப்பர் காவலன் காவா னெனின்

காவலன் = அரசன், காவான் எனின் = முறைப்படி ஆட்சி செய்யாவிட்டால், ஆ = பசுக்கள், பயன் = பாலின் குன்றும் = குறையும்; அறுதொழிலோர் = ஆறுதொழில்களைக் கொண்ட பிராம்மணர்; நூல் = வேதங்களை மறப்பர். பயன் என்பது வடமொழியில் பயஸ் என்பதன் முதல் வேற்றுமை யொருமையின் தற்பலம்.

பிராம்மணனுக்குரிய அறுதொழிலாவன : - வேதத்தை ஓதல், வேதத்தை ஓதுவித்தல், யாகத்தை செய்தல், யாகத்தைச் செய்வித்தல், தானம் கொடுத்தல், தானம் வாங்குதல்.

“மறப்பினும் ஒத்துக் கொளலாகும்” என்ற குறளிற் கூறியபடி இக்குறளிலும் மறுதொழிலோர் எனக் கூறாது பார்ப்பார் என ஏன் ஆசிரியர் கூறவில்லை எனின், பிராமணர்க்குரிய ஆறுதொழில்களைச் செய்யும் பிராம்மணர்களையே குறித்தற்கு அவ்வாறு ஆசிரியர் கூறினர் என்னலாம். இக்காரணம் பற்றியே புறநானூற்றுச் செய்யுளில் “ஆனியற்பார்ப்பன மாக்கள் (புறநானூறு.6)” என்ற விடத்து ஆனியல் என்ற அடைமொழியை அச்செய்யுளாசிரியர் வழங்கினார். பசுக்களிடம் பால் குன்றின்மையால் உலகிற்கு எவ்வளவு கேடு வருமோ அவ்வளவு கேடு பிராமணர் வேதத்தை மறத்தலால் உலகிற்கு வரும் என இவ்வாசிரியர் கூறினமையின் இவர் வைதிக மார்க்கத்தினர், என்பதற்கு ஐயமில்லை.

“பசுக்கள் பால் குன்றியவழி அவியின்மையாலும், அது கொடுத்ததற்குரியார் மந்த்ரம் கற்பகம் என்பன ஓதாமையாலும் வேள்வி நடவாதாம். ஆகவே வானம் பெயல் ஒல்லாது” (மழை பெய்யாது) என்பதாயிற்று என்றார் பரிமேலழகர்.

இக்குறளின் உண்மையை நேர்முகமாகக் கூறுவது ஸ்வஸ்தி - பரிபாலயந்தாம் - ந்யாய்யேந - மார்ஹேண மஹீம்.... என்னும் ஸ்ரீ ராமாயணம் முதலிய உயர்தர நூல்களில் இறுதியில் பாராயணம் செய்யப்படும் மங்களவாக்யம். இதன் பொருள், அரசு புரிவோர் நன்முறையில் மக்களைப் பாதுகாக்கட்டும்; (அதனால்) பசுக்களும், அந்தணர்களும் சுபம் உண்டாகட்டும்; (அதனால்) உலகமாந்தர் எல்லோரும் சுகமாக வாழட்டும் என்பதே.

“வாழ்க அந்தணர் - வானவர் - ஆன் - இனம் - வீழ்க தண்புனல் - வேந்தனும் - ஓங்குக - ஆழ்க - தீயது - எல்லாம் - அரன் - நாமமே - சூழ்க - வையகமும் - துயர் தீர்கவே” என்பது சம்பந்தசுவாமிகளின் திருப்பதிகம். இந்த குறளில் சொல்லும் கருத்தையே மகாபாரதம் சாந்திபர்வம் 67வது அத்யாயம் 26வது சுலோகமும் கூறுகிறது.

# இராமாவதாரம் எதற்காக ?

இராமாயணம் சீனிவாசன்

*அக்டோபர் 18 இன் தொடர்ச்சி*



என் பெயர் தனு. முன்பு ஒரு காலத்தில் நான் மிகவும் பலம் கொண்டவனாக இருந்தேன். மூவுலகிலும் காணமுடியாத உடல் எனக்கிருந்தது. அதனால் காட்டிற்கு வருபவரையெல்லாம் துன்புறுத்தி வந்தேன். ஒரு நாள் ஸ்தூலசிரஸ் எனும் மகரிஷி என் அடாத செயலைப்பார்த்து யாவரும் வெறுக்கத்தக்க உடலை அடை என்று சபித்தார். அவரிடம் நான் விமோசனம் கேட்க அவர்

**''யதா சித்வா புவௌ ராமாத்ஸ்த்வம் தஹேத் ராமேன வனே**
**ததா த்வம் ப்ராப்ஸ்யஸே ரூபம்ஸ்வமேவ விபுலம் சுபம்''**

எப்போது ராமர் உன் கைகளை வெட்டி வனத்தில் கொளுத்துகிறாரோ அப்போது உன் முன் வடிவை அடைவாய் என்றார். நானும் நீண்ட நாட்கள் தவம் செய்தேன். ப்ரம்மாவும் எனக்கு தீர்காயுள் வரம் அளித்தார். வரபலத்தால் இந்த்ரனையும் எதிர்த்தேன். கோபம் கொண்ட அவன் வஜ்ராயுதத்தால் தலையில் அடிக்க அது என் உடலுக்குள் சென்றுவிட்டது. நானும் அவரிடம் மன்றாட என் இரு கைகளையும் எவ்வளவு தூரம் வேண்டுமானாலும் நீட்டலாம் என்று வரமளித்தார். இதற்கு விமோசனம் எப்போது என்று கேட்க அவர்

**''ஸ து மாம் அப்ரவீத் இந்த்ரோ யதா ராம: ஸலக்ஷ்மண:**
**சேத்ஸ்யதே ஸமரே பாஹூ ததா ஸ்வர்கம் கமிஷ்யஸி''**

இந்த்ரன் என்னிடம் எப்போது ராமன் லக்ஷ்மணனுடன் வந்து என் இரு கைகளையும்வெட்டுகிறானோ அப்போது ஸ்வர்கம் சேருவாய் என்றான்.

**ஸ த்வம் ராமோஅபி பத்ரம் தே நபமன்யேன ராகவ**

அந்த ராமன் நீங்களாய் இருக்கும் பக்ஷத்தில் உமக்கு மங்களம் உண்டாகட்டும். வேறு

எவராலும் இச்செயலைச் செய்யமுடியாது. நீங்கள் என் உடலைக் கொளுத்தினால் நானும் உமக்கு உதவி புரிவேன் என்று கூறினான். ராமனும் அவன் கூறியபடியே செய்ய அவன் தன்னுடலை விட்டு சுயவடிவத்தை கொண்டான். பின்பு கூறுவான்.

**'' ஸ்ரூயதாம் ராம வக்ஷ்யாமி ஸுக்ரீவோ நாம வானர:**
**ப்ராதா நிரஸ்த:க்ருத்தேன வாலினா சக்ரஸூனு:''**

ராம நான் சொல்வதைக்கேள். ஸுக்ரீவன் எனும் வானரன் வாலி எனும் அவனுடைய அண்ணனால் துரத்தப்பட்டவன், நான்கு வானரங்களோடு ரிஷ்யஸ்ருங்க மலையில் வசிப்பவன். வாலி அவனுடைய அண்ணன் மிகவும் பராக்ரமசாலி. க்ரோதத்தினால் சுக்ரீவனை துரத்திவிட்டான். அவனை நீங்கள் நண்பனாய் ஏற்றுக்கொண்டால் அவன் சீதையின் இருப்பிடத்தை கண்டு பிடிப்பான். நானாதிக்குகளிலும் வானரங்களை அனுப்பி உமக்கு சகாயம் செய்வான். நீங்கள் எந்த மன நிலையில் உள்ளீரோ அதே நிலையில்தான் அவனும் இருக்கிறான். அவனது நட்பு உமக்கு இன்றியமையாதது. இப்படி கூறி ராமன் ருஸ்யமூக மலையை அடைவதற்கு வழியையும் காட்டி ராமனிடம் விடைபெற்றான். கபந்தன் எனும் தனு. பின்பு கூறுவான்

**''த்வாம் து த்ர்மே ஸ்த்திதா நித்யம் ஸர்வபூத நமஸ்க்ருதம்**
**த்ருஷ்ட்வா தேவோபமம் ராம ஸ்வர்கலோகம் கமிஷ்யதி''**

பம்பா நதிக்கரையில் உள்ள சபரியை அவள் மதங்க முனிவரின் சிஷ்யை என்றுகூறி அவள் தர்மத்தில் நிலைபெற்றவள், எல்லா ஜீவராசிகளாலும் வணங்கப்படுபவள், ராம தேவர் போன்ற உம்மை தர்சித்து ஸ்வர்கலோகம் செல்வாள் என்று கூறினான். பின்பு ராமனால் அனுமதிக்கப்பட்டு அவனும் ஸ்வர்கமேகினான்.

ராமாயணத்தில் கபந்தனை ஒரு திருப்புமுனையாகக் கொள்ளலாம். அவன் சுக்ரீவனைப்பற்றி சொல்லாமல் இருந்தால் ராமசுக்ரீவ நட்பு ஏற்பட்டிருக்காது அல்லவா. தசரதனை தனது தந்தையாக பகவான் விஷ்ணு நினைத்துக்கொண்ட தன் மூன்றாவது காரணத்தை வாசகர்கள் பார்த்திருப்பீர்கள்.

இனி அடுத்த காரணத்தையும் பார்ப்போம்.

(தொடரும்)

# தமிழ் பாகவதம்

தொகுப்பு : வீராபுரம் சம்பத் தீக்ஷிதர்

16. பதினாறாவது அவதாரம் ஜமதக்னி புதல்வராய் பரசுராமனாய் அவதரித்து க்ஷத்ரியர்களை இருபத்தோரு தலைமுறை அழித்தது.

17. பதினேழாவது அவதாரம் பராசரர், ஸத்யவதி திருமகனாய் அவதரித்து வேதத்தை நான்காக வகுத்துக் கொடுத்த வ்யாஸர்,,,

18. பதினெட்டாவது அவதாரம் மானிடராய்ப் பிறந்து தேவகாரியமாம் இராவண வதத்திற்காக அலைகடல் தன்னை அணை கட்டிக் கடந்து இலங்கை சென்று அரக்கனாம் இராவணனை அழித்த ஸ்ரீ ராமாவதாரம்.

19. பத்தொன்பதாவது, இருபதாவது அவதாரம் பூபாரம் தீர்க்க எடுத்த அவதாரங்களாம் ஸ்ரீ பலராம ஸ்ரீ க்ருஷ்ண அவதாரங்கள்.

20. கலியுகத்தில் கீகட தேசத்தில் புத்தராய் அவதரித்து பௌத்த மதத்தை ஏற்படுத்திய பௌத்தாவதாரம் இருபத்தோராவது அவதாரம்.

21. கலியுக முடிவில் எம்பெருமான் துட்டர்களை அழிக்க எடுக்கப் போகும் அவதாரம் இருபத்திரண்டாவது.

எம்பெருமானின் அவதாரங்கள் எண்ணில் அடங்கா. அவற்றில் சில அவதாரங்களை மட்டும் இந்த ஸ்ரீமத் பாகவதத்தில் குறிக்கப்பட்டுள்ளன என்பதை உணர்ந்து தருமத்திற்கு இடையூறும், அதர்மத்தின் ஆட்டமும் அதிகரிக்கும் போதெல்லாம், தருமத்தைக் காக்கவும், அதர்மத்தை அழிக்கவும் அறவழியில் நடப்பவரைக் காக்கவும், அறமற்ற வழியில் செல்பவர்களை அழிக்கவும் எம்பெருமான் அவதரிப்பதற்காக அவனே கூறியுள்ளான் என்பதை நினைவு கூறுவோம்.

## ஸ்ரீமத் பாகவதம் தோன்றிய விதம்

1. த்ரேதாயுகத்தின் முடிவில் துவாபரயுகமானது வந்தபோது பராசர பிரம்மத்தின் திருமகனாக யோகியான விஷ்ணுவின் அம்சமான வ்யாஸ பகவான் அவதரித்தார்.

2. மக்களின் ச்ரம தசையை (துர்பாக்யம்) வ்யாஸ பகவான் இறையருளால் பார்த்து எல்லா வர்ணாச்ரமங்களையும் மக்களின் எதிர்கால நன்மையை எதிர்நோக்கி அமைத்துக் கொடுத்தார்.

3. ரிக், யஜுர், ஸாம, அதர்வ பெயருள்ள நான்கு வேதங்களாகப் பிரித்த அவர் இதிஹாஸ புராணங்களை ஐந்தாவது வேதம் என்று அறியச் சொன்னார்.

4. ரிக் வேதம் தரித்தவர் பைலர்; ஸாம வேதத்திற்கு ஜைமினி, யஜுர் வேதத்திற்கு வைசம்பாயனர் என்று நியமித்தார்.

5. அதர்வ வேதத்திற்கு அங்கிரஸா என்ற ஸுமந்து, கொடியமுனி, இதிஹாஸ புராணங்களுக்கு ரோமிஹர்ஷணர் என்று நியமித்தார்.

6. இப்படி வேதங்கள் வகுத்த வ்யாஸ பகவானுக்கும், மனதில் ஓர் நிறைவு ஏற்படாமல் இருந்தபோது நாரதர் ஆச்ரமம் பக்கம் வந்தார்.

குறிப்பு : நிறைவு என்பது நின்மலனின் திருவுளம், அடியேனைப் பொறுத்தவரை வரதனைப் பற்றி எழுதினேன். அத்திவரதனைப் பற்றி எழுதினேன். அமுதனைப் பற்றி எழுதினேன். தேவநாதனைப் பற்றி எழுதினேன். ஏறக்குறைய சிறிதும் பெரியதுமாய் 50 நூல்கள். இன்னமும் என் எழுத்துப் பணியில் நிறைவு ஏற்படவில்லை. தேவப் பெருமான் ஸ்ரீமத் பாகவதம் வெளிவர வேண்டும். தமிழில் என்று திருவுளம் பற்றினான். எனவே எழுதுகிறேன். அவன் உகப்பதற்காகவே.

7. வந்த நாரதர் வியாஸரைப் பார்த்து, ‘பராசரர் திருக்குமாரரான வ்யாஸ பகவானே உம்மால் அறியப்பட்டவை மிகவும் நன்கு நிறைந்தவை. ஆயினும் உமது மனம் நிறைவு கொள்ளவில்லை போலும்’ என்றார்.

8. அறிய வேண்டியவை, மனப்பாடம் செய்ய வேண்டியவை (வேதம்) அழிவே இல்லா பிரம்ம சூத்திரம், இவைகளை அளித்த பின்னமும் மனதில் தூய்மையும் ‘செய்ய வேண்டியதைச் செய்து விட்டோம்’, என்ற நிறைவும் இல்லையே.

9. வ்யாஸர் சொன்னார். ‘நீங்கள் சொன்னவை எல்லாம் என்னிடம் இருக்கின்றன. உண்மையே ஆயினும் என் ஆத்மா த்ருப்தியடையவில்லை. அதன் காரணம் தெளிவில்லாத அறிவு. பரமாத்மபூதம் பற்றி கேட்க விரும்புகிறேன்.’

10. ஸ்வாமி நாரதரே! நீர் ஆதவன் போல் மூவுலகிலும் ஸஞ்சரிப்பவர். வாயுவேப் அனைத்திற்கும் ஸாக்ஷி. வ்ரதத்தில் இருக்கும் எனக்கு உயர்ந்த, சிறந்த ப்ரம்மதத்வமாம் பெருவ்ரதத்தில் இருக்க வழி சொல்ல வேண்டும்.

(தொடரும்)

# கலியின் ஆரம்பம்

பஞ்சபாண்டவர்களில் ஒருவரான சஹாதேவன் சந்தைக்குள் நுழைந்தான். அழகான குதிரையை அவனும் பார்த்தான். உடனே குதிரையின் உரிமையாளரை நெருங்கி, ‘குதிரை என்ன விலை? என்று கேட்டான்.

குதிரையின் உரிமையாளரோ,

‘ஐயா! இந்த குதிரை விற்பனைக்கு அல்ல. நான் கேட்கும் கேள்விகளுக்கு பதில் சொன்னால், குதிரையை இலவசமாகவே கொடுப்பேன்‘ என்றார்.

சகாதேவன் உடனே, ‘சரி கேள்வியைச் சொல்லுங்கள்‘ என்றான்.

குதிரையின் உரிமையாளர், ‘நன்றாகக் கவனியுங்கள்! பிறகு பதில் சொல்லுங்கள்!

ஒரு பெரிய கிணறு. அதில் உள்ள தண்ணீரைக் கொண்டு ஏழு சிறிய கிணறுகளை நிரப்பலாம். ஆனால், அந்த ஏழு கிணறுகளில் இருக்கும் தண்ணீரை எடுத்து, மறுபடியும் அந்த பெரிய கிணற்றில் ஊற்றினால் பெரிய கிணறு நிரம்பவில்லை.

இது ஏன்? நன்றாக யோசித்து பதில் சொல்லுங்கள்‘ என்றார். சஹாதேவனால் பதில் சொல்ல முடியவில்லை. அங்கேயே சந்தையில் உட்கார்ந்துவிட்டான்.

சற்று நேரத்தில்.... சகாதேவனை தேடிக்கொண்டு நகுலனும் சந்தைக்கு வந்து விட்டான். அவனும் குதிரையைப் பார்த்து, அதன் அழகில் மயங்கிப் போய் விலை கேட்டான்.

குதிரையின் உரிமையாளர், நகுலனிடம் ஒரு கேள்வி கேட்டார். ‘ஐயா! நான் ஒரு கேள்வி கேட்கிறேன். பதில் சொல்லிவிட்டு, குதிரையை இலவசமாகவே பெற்றுக்கொள்ளுங்கள்.

துணி தைக்கும் ஊசி இருக்கிறது அல்லவா? அதன் ஓட்டையின் வழியாக ஒரு யானை புகுந்து அடுத்த பக்கம் போய்விட்டது. ஆனால் யானையின் வால் மட்டும் அந்த ஓட்டையின் வழியாகப் போக முடியவில்லை. ஏன்?‘ என்றார்.

நகுலனால் பதில் சொல்ல முடியவில்லை. அவனும் சந்தையில் உட்கார்ந்திருந்த சஹாதேவனுடன் சேர்ந்து உட்கார்ந்துவிட்டான்.

அதன் பிறகு ஒரு சில நிமிடங்களில், அர்ஜுனனும் அங்கு வந்தான். அவனும், குதிரையைப் பார்த்து, அதன் அழகில் மயங்கிப் போய் விலை கேட்டான். குதிரையின்

உரிமையாளர் அர்ஜுனனிடமும் கேள்வி கேட்டார்.

'ஐயா! ஒரு வயல் காட்டில் நன்றாக விளைந்து இருந்தது. அதற்கு வேலியெல்லாம் போட்டு பாதுகாப்பாக வைத்து இருந்தார்கள். ஆனால் அறுவடை காலத்தில், அந்த வயல் காட்டில் எதுவுமே இல்லை. வேலியெல்லாம் அப்படியே இருந்தது. அப்படி இருந்தும் விளைந்த தானியங்களை எல்லாம் யார் எடுத்தார்கள்?

பதில் சொல்லிவிட்டு, குதிரையை கொண்டு செல்லுங்கள்' என்றார். அர்ஜுனனால் பதில் சொல்ல முடியவில்லை. அவனும் ஆலோசனை செய்தபடி அங்கேயே உட்கார்ந்து விட்டான்.

சகோதரர்கள் மூவரும் இப்படியே உட்கார்ந்திருக்க, அரண்மனையில் அவர்களைக் காணாமல், தர்மர் திகைத்தார். பீமனைக் கூப்பிட்டு, 'தம்பி! நம் தம்பிகள் மூவரையும் நீண்ட நேரமாக காணவில்லை. நீ போய், அவர்கள் எங்கு இருந்தாலும் தேடி அழைத்து வா!' என்றார்.

பீமனும் போய் தேடிப்பிடித்து, அர்ஜுனன், நகுலன், சஹாதேவன் மூவரையும் அழைத்து வந்தான். பாஞ்சாலியோடு அரியணையில் அமர்ந்திருந்த தர்மர், அவர்களைப் பார்த்ததும், 'அர்ஜுனா! நீண்ட நேரமாக நீயும் உன் தம்பிகளும் இங்கு இல்லை. எங்கே போய் இருந்தீர்கள்?' எனக் கேட்டார்.

அதற்குப் பதிலாக அர்ஜுனன், நடந்ததை எல்லாம் சொல்லி, குதிரை உரிமையாளர் கேட்ட மூன்று கேள்விகளையும் சொன்னான்.

அதைக் கேட்டதும் தர்மர் நடுங்கினார். அதைப் பார்த்த தம்பிகள் எல்லாரும் திகைத்தார்கள்.

அண்ணா! நீங்கள் நடுங்கும்படியாக என்ன நடந்தது?' எனக் கேட்டார்கள்.

'தம்பிகளே! எதிர்காலத்தில் நடக்கப் போகும் விபரீதங்களை, அந்த மூன்று கேள்விகளும் சொல்கின்றன.'

அதை நினைத்துத்தான் நடுங்கினேன். 'ஒவ்வொன்றாகச் சொல்கிறேன் கேளுங்கள்' என்று விரிவாகக் கூறினார்.

'உங்களிடம் கேள்வி கேட்டவன் கலி புருஷன். அவன் கேட்ட முதல் கேள்வியில் பெரிய கிணறு என்பது பெற்றோர்கள். ஏழு சிறிய கிணறு என்பது அவர்களது பிள்ளைகள். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை, அவர்கள் எவ்வளவு பேர்களாக

இருந்தாலும் சரி அவ்வளவு பிள்ளைகளையும் காப்பாற்றுவார்கள். இதைத்தான் பெரிய கிணற்றின் தண்ணீரைக் கொண்டு சிறிய கிணற்றை நிரப்பினார்கள் என்பது குறிக்கிறது.

ஆனால், அந்த பிள்ளைகளோ, அவ்வளவு பேர்களும் சேர்ந்தால் கூட, தங்கள் பெற்றோரை காப்பாற்ற மாட்டார்கள். இதைத்தான் ஏழு சிறிய கிணறுகளில் உள்ள தண்ணீரைக் கொண்டு, பெரிய கிணற்றை நிரப்ப முடியவில்லை என்பது குறித்தது.

அடுத்து இரண்டாவது கேள்விப்படி, இனி வருங்காலங்களில் அக்கிரமங்கள், முறைகேடான செயல்கள் ஏராளமாக நடைபெறும்.

ஆனால், நல்ல செயல்கள் நடைபெறுவது மிகவும் கடினமாக இருக்கும். இதைத்தான் யானையே போன வழியில், அதன் வால் போக முடியவில்லை என்று சொல்லி இருக்கிறார்.

அடுத்து மூன்றாவது கேள்வியில்,

பயிர்கள் என்பது மக்களைக் குறிக்கும். பாதுகாக்கும் வேலி என்பது அதிகாரிகளைக் குறிக்கும்.

அதாவது மக்களைப் பாதுகாக்க வேண்டிய அதிகாரிகளே அவர்களை அழித்து விடுவார்கள்.

மக்கள்தான் வறுமையில் வாடுவார்களே தவிர, அதிகாரிகள் செழிப்பாகத்தான் இருப்பார்கள்.

இதைத்தான், வேலி அப்படியே இருக்க, பயிர்கள் எப்படி அழிந்தன என்ற கேள்வி குறிப்பிடுகிறது என்று சொல்லி முடித்தார் தர்மர்.

கலியுகத்தில் உலகம் இப்படித்தான் இருக்கும் என்பது மகாபாரத காலத்தில் எடுத்துரைக்கப்பட்டது.

# ஸ்ரீஸிந்து நதி மாஹாத்மியம்

*- பி.ஆர்.கண்ணன், நவி மும்பை*

## ஸிந்து புஷ்கரம்

*சென்ற வருஷங்களில் விமரிசையாகக் கொண்டாடப்பட்ட கோதாவரி, கிருஷ்ணா, காவேரி, தாம்ரபரணி நதிகளின் புஷ்கர விழாக்களைப்போன்று, இவ்வருஷம் 2019 நவம்பர் மாதம் 4 ந்தேதி முதல் 15 ந்தேதி வரை 12 நாட்களுக்கு ஸிந்து நதி புஷ்கரவிழா கொண்டாடுவதற்கு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் சங்கராசாரிய ஸ்வாமிகள் அருளியுள்ளார்கள். இவ்விழா காஷ்மீர மாநிலத்திலுள்ள லதாக் பகுதியில் 'லே' என்கிற ஊரில் ஸிந்து நதி தீரத்தில் அனுஷ்டிப்பதற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன. குரு பகவான் விருச்சிக ராசியிலிருந்து தனுர் ராசியில் நவம்பர் 4ந்தேதி பிரவேசித்து, ஒரு வருஷகாலம் தனுர்ராசியில் இருக்கும்போது, புஷ்கர தேவதை ஸிந்து நதியில் ஸாந்நித்தியம் கொண்டிருப்பார். அந்த காலத்தின் முதல் 12 நாட்கள் விசேஷ பலன் வழங்குபவை. இந்நாட்களில் ஸ்னானம், ஜபம், பித்ரு தர்ப்பணம், நதிபூஜை, தானம் முதலியவை வெகு விசேஷ பலன் அளிப்பவையாக சாஸ்திரங்களில் வலியுறுத்தப்பட்டிருக்கின்றன. லதாக்கிலுள்ள லே என்கிற இடத்தில் ஸிந்து நதியில் முதல் முறையாக நம் ஆசாரியாள் ஸ்ரீ ஜயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் சிலவருஷங்களுக்கு முன்னர் ஸ்னானம் செய்து, விழா நடத்தி, வைதீக அனுஷ்டானங்களையெல்லாம் ஆற்றி, வருஷா வருஷம் குரு பூர்ணிமையன்று விமரிசையாக ஸிந்து பூஜை நடத்தவும் வழிகாட்டியுள்ளார்கள்.*

*நம்முடைய சாஸ்திரங்களில் ஆறுகளை இருவிதமாகப்பிரித்துச் சொல்லியிருக்கிறார்கள் - நதி யென்பது, கிழக்குக்கடலில் சங்கமிக்கும் ஆறாகும்; நதம் என்பது மேற்குக்கடலில் இணையும் ஆறாகும். ஆகவே ஸிந்து ஆறானது, நதம் என்று குறிக்கப்படுகின்றது.*


## ஸப்தஸிந்து

*ரிக்வேதத்திலும் யஜுர்வேதத்தின் அகமர்ஷண ஸூக்தத்திலும் வரும் பிரசித்தி பெற்ற நதி ஸ்துதி ஸூக்தமானது, ஸிந்து, அதன் கிளைநதிகள், கங்கை, யமுனை, ஸரஸ்வதி ஆக மொத்தம் ஏழு நதிகளை ஸ்தோத்திரம் செய்கின்றது.*

**இமம் மே கங்கே யமுநே ஸரஸ்வதி ஶுதுத்ரி ஸ்தோமம் ஸசதா பருஷ்ண்யா ।**
**அஸிக்ந்யா மருத்வ்ருதே விதஸ்தயார்ஜீகீயே ஶ்ருணுஹ்யா ஸுஷோமயா ।।**

***(8.3.6.10)***

*இந்த ஏழு நதிகளையும் சேர்த்து, 'ஸப்தஸிந்து' என்று ரிக்வேதத்தின் பல இடங்களில் போற்றிப் பேசுகிறார்கள் மகரிஷிகள். இங்கு, 'ஸிந்து' என்கிற பதம் ஆறு (நதி) என்கிற பொது அர்த்தத்தில் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த ஏழு நதிகளாவன: 1.கங்கை, 2.யமுனை, 3.ஸரஸ்வதி, 4.ஶுதுத்ரி, 5.மருத்வ்ருதா (விதஸ்தா என்றும் வருகிறது) (அதன் கிளைநதிகளான பருஷ்ணி, அஸிக்னியுடன்), 6.ஆர்ஜிகியா (விபாசா என்ற பெயரும் உண்டு) 7.ஸுஷோமா (இது தான் ஸிந்து).*




### இந்த நதிகளின் தற்காலப் பெயர்களாவன:

*ஸிந்து, ஶுதுத்ரி- ஸட்லெஜ், விதஸ்தா-ஜீலம், பருஷ்ணி- ராவி, அஸிக்னி- சீனாப், விபாசா- பீயாஸ்.*

*கங்கை, யமுனை தவிர்த்து, பாக்கி ஐந்து நதிகளும் சேர்ந்து, பஞ்சநதா என்று அழைக்கப்பட்டன; அவ்விடமே பஞ்சாப் என்றாயிற்று.*

*ஸிந்து என்ற பதம் ஸம்ஸ்கிருதத்தில் 'ஸ்யந்தநாத் ஸிந்து:'' என்றபடி,''வெகுவாகப் பிரவஹித்துப் பாய்வதினால் ஸிந்து' என்று பொருள்படுகிறது.*

*விபாசா (பீயாஸ்) என்பது, வஸிஷ்ட முனிவரின் (பாசம்-கட்டு) கட்டுகளைக் களைந்ததினால் ஏற்பட்ட பெயர். இக்கதை ரிக்வேதத்தில் வருகிறது. அதாவது, காமதேனுவை வஸிஷ்டர் தர மறுத்ததால் விஸ்வாமித்திரருக்கும், வஸிஷ்டருக்கும் ஏற்பட்ட கடும் யுத்தத்தில், விஸ்வாமித்திரர் படுதோல்வி அடைந்தபின், வஸிஷ்டரின் நூறு புதல்வர்களைக் கோபத்துடன் கொன்று தீர்த்தார். மனமுடைந்த வஸிஷ்டர், கழுத்திலும், சரீரத்தின் பிற பாகங்களிலும் கயிற்றைக் கட்டிக்கொண்டு, விபாசா நதியில் மூழ்கினார். ஆனால், விபாசா நதியின் கடும் வேகத்தில் அவருடைய கயிறுகள் அறுந்துபோய், அவர் பிழைத்துக்கொண்டார். அதனால் அந்நதிக்கு விபாசா என்ற பெயர் உண்டாயிற்று. மகாபாரதத்தில் இக்கதை தொடர்கிறது. பிறகு, வஸிஷ்டர் காடு, மலைகளிலெல்லாம் சுற்றி, ஹைமவதி என்கிற நதியில் மூழ்க முயற்சித்தார்.*

**ஸா தமக்நிஸமம் விப்ரமநுசிந்த்ய ஸரித்வரா ।**
**ததா வித்ருதா யஸ்மாச்சதத்ருரிதி விஶ்ருதா ।।**

*முனிவரின் அக்கினிபோன்ற தேஜஸ்ஸைக்கண்ட நதி, உடனே தன்னை நூறு கிளைகளாகப் பிரித்துக்கொண்டு, முனிவரைக் காப்பாற்றியது. அந்நதியே 'ஸதத்ரு' (ஸுதுத்ரி) (ஸட்லெஜ்) என்றாயிற்று.*

*ரிக்வேதத்தில் விபாசா-ஸுதுத்ரி நதிகள் இணையும் இடத்தின் பெருமையைக் கூறும் கதையொன்று உள்ளது. விஶ்வாமித்திரர் ஒரு சமயம் இவ்விடம் வந்து அந்நதிகளைப் பிரார்த்தித்தார்: 'நான் பெரும் காரியங்களை இயற்றிய குசிகரின் புத்திரன். நான் இந்நதிகளைக்கடந்து, யாகத்திற்கு வேண்டிய ஸோமலதையினைச் சேகரிப்பதற்காக, அக்கரை போய்த்திரும்பும் வரை, ஒரு முகூர்த்தம் நீங்கள் உங்கள் வழக்கமான வேகத்தினையும் பெருக்கினையும் குறைத்து, மெல்லோட்டமாகச் செல்வீர்.' நதிகள் கூறினர்: 'ஸர்வலோகங்களுக்கும் காரணமான, பலவானான, வஜ்ரஹஸ்தனான இந்திரன், பெருமழை பொழிந்து, நாங்கள் ஆழமாக்கப்பட்டு, பெரும் நீர்ப்பெருக்குடன், கடலுக்குச் செல்கிறோம். இந்திரன் ஆணைப்படி செல்லும் நாங்கள், தங்களுக்காக பெருக்கினைக் குறைக்கமுடியாது.' என்றனர். பிறகு, விஸ்வாமித்திரர் லோகக்ஷேமத்திற்காகச் செய்யும் யாகத்திற்கு, தங்களாலியன்ற உபகாரம் செய்ய எண்ணி, மனம் மாறிய நதி தேவதைகள் சொன்னார்கள்: 'வெகு தூரத்திலிருந்து ரதத்தில் வந்துள்ள தங்களுக்கு நாங்கள் உபகாரம் செய்கிறோம்.' என்று கூறி, தங்கள் பெருக்கினைக் குறைத்துக்கொண்டனர்.*

*ஸ்காந்தபுராணத்தில் (ரேவா கண்டம்) விபாசா நதியை வெகுவாக ஸ்தோத்திரம் செய்திருக்கிறார்கள். ஜீவாத்மாவை மலம் நிறைந்த சரீரத்துடன் இணைக்கும் ஸம்ஸார பந்தத்தினை - பாசத்தினை- அறுத்தெறியும் நதி விபாசா என்று மிக அழகாகக் கூறுகிறார்கள்.*

**விண்மூத்ரநிசயாம் கோராம் பாம்ஶசோணிதகர்தமாம் ॥**
**பாஶாந்நித்யம் து ஸம்பாதாம் யஸ்மாந் மோசயதே ப்ருஶம் ।**
**விபாஶேதி ச ஸா ப்ரோக்தா ஸம்ஸார்ணவதாரிணீ॥**

*பருஷ்ணி (ராவி) நதிக்கு இராவதி (அ) ஐராவதி என்ற பெயரும் புராணங்களில் உண்டு.*

*அஸிக்னி (சீனாப்) நதி புராணங்களில் சந்திரபாகா என்ற பெயரில் பிரசித்தமாகக் கொண்டாடப்படுகிறது.* *(தொடரும்)*

# வ்யாஸ பகவானின் தர்மகோஷம்

*இளம்பூரணர்*

**மாதபித்ருஸஹஸ்ராணி புத்ரதாரசதானி ।**
**ஸம்ஸாரேஷ்வனுபூதானி யாந்தி யாஸ்யந்தி சாபரே ॥1**

**ஹர்ஷஸ்தானஸஹஸ்ராணி பயஸ்தான சதானி ।**
**திவஸே திவஸே மூடமாவிசந்தி ந பண்டிதம் ॥ 2**

**ஊர்த்வபாஹுு விரம்யேஷ ந ச கச்சித் ஸ்ருணோதி மே ।**
**தர்மாதர்தஸ்ச காமஸ்ச ஸ கிமர்தம் ந ஸேவ்யதே ॥ 3**

**ந ஜாது காமான் நபயான் ந லோபாத்**
**தர்மம் த்யஜேத்ஜாவிதஸ்யாபி ஹேதோ:**
**நித்யோ தர்ம: ஸுகதுக்கே த்வனித்யே**
**ஜீவோ நித்யோ ஹேதுரஸ்ய த்வனித்ய: ॥ 4**

**இமாம் பாரத ஸாவித்ரீம் ப்ராதருத்தாய ய: படேத்**
**ஸ பாரதபலம் ப்ராப்ய பரம் ப்ரம்மாதிகச்சதி ॥ 5**

*நமது ஸனாதன மதத்தின் தாத்பர்யத்தை பல கூறுகளாக மக்கள் அனைவருக்கும் வழங்கியவர் வ்யாஸ பகவான். பாரதம் எழுதி முடித்தபின் அவருடைய முடிவான கொள்கை என்ன வென்பதை பரத ஸாவித்ரீ எனும் பெயர் கொண்ட நான்கு ஸ்லோகங்களில் கூறுகிறார். நம் நாட்டு எந்த ரிஷிக்கும் தர்மம் மீதுதான் மதிப்பு. வ்யாஸரும் அதற்கு விதிவிலக்கல்ல.*

*''நெரு நல் உளன் இன்றில்லை எனும்*
*பெருமைபடைத்து இவ்வுலகு''*

*என்பார் வள்ளுவர். அதுபோலவே ஒவ்வொரு ஜீவனுக்கும் பிறவிகள் மூலமாக பல தாய் தந்தையர் வருவதும் போவதுமாய் இருக்கின்றது. உண்மையில் போக்கும் வரவும் இல்லா புண்ணியனின் அம்சமாகிய ஜீவாத்மா இவைகளை உண்மை என்று நம்பி ஏமாறுகிறது. மகிழ்ச்சிக்கு பலவிடங்கள், துக்கத்துக்கு பலவிடங்கள். ஒரு பிறவியிலேயே பல சுக துக்க நிகழ்ச்சிகள் என்றால் எத்தனை பிறவிகளில் எத்தனை சுகதுக்கங்கள். ப்ரம்மிப்பாயுள்ளது. இவைகளைப் பற்றிக் கவலை கொள்ளாமல் இருக்க வேண்டும் என்கிறார் வ்யாஸர்.*

**மூடனாய் அழாதே, பண்டிதனாய் தைர்யமாயிரு** என்பது தாத்பர்யம். இவை இரண்டு ஸ்லோகங்களும் மனித வாழ்வின் அனித்யத்தைக் காட்டும்.

வ்யாஸ பகவான் தர்மஸ்வ்ரூபி. தன் அத்தனை க்ரந்தங்களிலும் தர்மம் பெரியது என்று கோஷித்தவர். ''தர்மோரக்ஷதி ரக்ஷித:'' என்றும் ''பரோபகாராய புண்யாய பாபாய பரபீடனம்'' என்று பல கதைகளின் மூலமாக தர்மத்தைப் பரப்பினார். அப்படியிருந்தும் மக்கள் தர்மவழியில் போகாமலிருப்பதை பார்த்து வெறுத்து ''கைகளைத் தூக்கி தர்மத்திலிருந்துதான் அதர்மம் தர்மத்திலிருந்துதான் காமம் என்று கதறுகிறேனே யாரும் கேட்பாரில்லையே'' என்று கூவுகிறார். அவர் காலத்திலேயே அப்படி என்றால் இக்காலத்தைப் பற்றி கேட்க வேண்டாம்.


மக்கள் அதர்மவழியை நாடுவதன் காரணம் பேராசை. அச்சம், லோபம் ஒன்று இருந்தாலே அதர்மம்தான். மூன்றும் சேர்ந்திருந்தால் அதர்மத்திற்குக் கேட்கவே வேண்டாம். ஜீவிக்கவேண்டும் எனும் குறிக்கோளுக்காக இந்த மூன்றில் எதையும் மனிதன் கடைபிடிக்கக் கூடாது. அவனது குறிக்கோள் ''வையத்துள் வாழ்வாங்கு வாழ வேண்டும்'' என்பதாயிருக்கவேண்டும். தர்மத்தை விட்டு இம்மூன்றையும் தழுவி வாழக்கூடாது. அதிகாரத்திலுள்ளவர்களின் நடவடிக்கை இப்படித்தானுள்ளது. தர்மம் நித்யமானது, சுகதுக்கங்கள் அனித்யமானவை. ஜீவன் நித்யமானவன். அவனுக்குக் காரணம் அனித்யமான மாயை. என்று நான்கு ஸ்லோகங்களில் கூறி தர்ம கோஷம் செய்கிறார். இந்த ஸ்லோகங்களில் எந்த ஒரு தேவதையையும் அவர் உபாசிக்கச் சொல்லவில்லை. தர்மத்தையே ஸ்வாமியாகக் கொண்டு அதன் வழி நடக்கச் சொல்கிறார். நாஸ்திகர்களுக்கும் இது பொருந்தும்.

வ்யாஸ பகவான் பரம கருணாமூர்த்தி. மக்கள் பால் கருணைகொண்டு இந்த நான்கு ஸ்லோகங்களை எவன் காலையில் படிக்கிறானோ அவன் ப்ரம்ம்மாகவே ஆகிவிடுவான் என்று பலஸ்ருதியாகக் கூறி முடிக்கிறார். இதற்கு ''பாரதஸாவித்ரீ'' என்று பெயர். சுருக்கமாக இதைப் பார்ப்போம்.

சுகதுக்கங்களுக்கு ஆட்பட்டு மனிதன் மூடனாய் இருக்ககூடாது. பண்டிதனாய் அவைகளுக்கு அப்பாற்பட்டு இருக்கவேண்டும். தர்மம் தான் அர்த்தம், காமம், இவற்றிற்கு ஆதாரம். எக்காரணம் கொண்டும் தர்மத்தை விட்டு செயல்படகூடாது. தர்மம் பெரியது. நித்யமானது. சுகதுக்கங்கள் அனித்யமானவை. இந்த தர்மகோஷம் எல்லாருக்காகவும் சொல்லப்பட்டது. குருபூர்ணிமையான 17.7.19 அன்று இதைப் படிப்போம். அது மட்டுமல்லாமல் அவர் கூறிய தர்மகோஷத்தின்படி நடப்போம். இதுவே அவருக்கு நாம் செய்யும் வ்யாஸ பூஜை.

# மகா பெரியவாளின் நினைவு மஞ்சரி 15

முல்லைவாசல் கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள்



## கீதையில் பாரத குட்டு

வ்யாஸ பகவான் பாரதம் எழுதும்போது வினாயகருடன் ஒப்பந்தம் செய்து கொண்டதற்கிணங்க வ்யாஸர் மளமளவென ஸ்லோகங்களைக் கூற பொருள் தெரிந்து விநாயகர் எழுதி வந்தார்.

நடு நடுவே சற்று கடினமான ஸ்லோகங்கள் வரும்போது அதன் பொருளை விநாயகர் யோசிக்கும் போது வ்யாஸர் பல ஸ்லோகங்களை கவனம் செய்து விடுவார். இத்தகைய ஸ்லோகங்களை பாரதகுட்டு என்பர். இப்பேர்பட்ட ரஹஸ்யம் கீதையிலும் இருக்க வேண்டுமல்லவா, என்று பெரியவா என்னைக் கேட்டார். நான் திகைத்தேன். உடனே அவர்கள் கூறினார்கள். ஐந்தாம் அத்யாயத்தில் 15 ஆவது ஸ்லோகத்தின் பிற்பாதியும் 16ஆம் ஸ்லோகத்தின் முன்பாதியும் இப்படி உள்ளது.

**''அஞ்யானேனாவ்ருதம் ஞ்யானம் தேன முஹ்யந்தி ஜந்தவ:**
**ஞானேன து ததஞ்யானம் யேஷாம் நாசிதாத்மன:''**

**பொருள் :** ஆத்ம ஸ்வரூபமான ஞ்யானத்தை வெகு நாட்களாக அவித்யை மறைத்துள்ளது. எனவேதான் யாவரும் தத்வமறியாமல் உடல் முதலியவற்றால் மோகமடைந்து துக்கப்படுகின்றனர். ஆனால் யாருக்கு இந்த அவித்யை அஞ்யானத்தால் அழிக்கப்பட்டு விடுகிறதோ அவர்களுக்கு அப்பரம் பொருள் விளங்குகிறது.

இங்கு ஒரு சிக்கல் உள்ளது. ஞானமும் அஞ்யானமும் ஒளியும் இருளும் போன்றவை. ஒளியை எப்படி அவித்யை மறைக்கும். அப்படி மறைத்தால் ஞானத்தால் எப்படி விலக்க முடியும் என்று விநாயகர் யோசித்தாராம். அதற்குள் வ்யாஸர் பல ஸ்லோகங்களை கவனம் செய்து விட்டார். இதற்கு பெரியவா கூறிய விளக்கம் அருமையானது. மேற்கூறிய குட்டுக்கு கீதையிலேயே விளக்கம் வருகிறது என்றார்.

**''தேஷாமனுகம்பார்த்தம் அஹமஞ்யானஜம் தம:**
**நாசயாமி ஆத்மபாஸ்வதோ ஞ்யான தீபேன பாஸ்வதா ॥''** 10 2

எனும் ஸ்லோகத்தில் விளக்கம் கிடைக்கிறது. சுத்தமான ஸ்வரூபத்தை அவித்யை மறைத்துவிட்டாலும் ஆத்மபாவம் எனும் அகண்டமான பொருளைப் பற்றிய ஸாக்ஷாத்காரமாகிய மனோ வ்ருத்தியில் ஸத் இருந்து கொண்டு ப்ரதிபலித்து நிற்கும் போது ஞ்யானத்தின் சக்தி அதிகரித்து அவித்யையை பொசுக்கிவிடும். ஒளி எங்கும் ப்ரகாசிக்கிறது. பஞ்சு போன்ற பொருளை எரிக்காத போதும் பூதக் கண்ணாடியின் உதவியால் அதே ஒளி பஞ்சை எரித்து விடுகிறது. எனவே நமக்கு அம்பாளின் அருளால் ஆத்ம ஸாக்ஷாத்காரம் ஏற்பட வேண்டும் என்று பெரியவா விளக்கிய போது எல்லாருடைய மனத்திலும் பேரானந்தம் ஏற்பட்டது.

**கலை(ந்த)ச்சொற்கள்**
**ஜூன் விடைகள்**

1. கசடதபற வல்லினமாம்
2. ச்யாமளா தண்டகம்
3. வைதிக தர்மவர்தினி
4. சைவத்திருமுறைகள்
5. குஞ்சித பாதம்

**கலை(ந்த)ச்சொற்கள்**
**ஜூலை வினாக்கள்**

1. அவத்ரதிவம்வைப
2. வ நலம்ளமும்மு
3. கபொகுங்மாற்டல்ற்
4. குஆயன்பன்ம்று
5. செவாயழித ந்ம்மி

|| ஸ்ரீ: ||
இனி பழைய புத்தகங்களை மீண்டும் Type செய்ய தேவையில்லை.
பழைய புத்தகங்கள் 20, 30, 50, 70 வருட புத்தகங்களை
Typeing செய்யாமலே பிழைகளை திருத்தி புதிய வடிவில் (New font) மாற்றி
எல்லா மொழிகளிலும் (All Languages) அச்சிட்டு தரப்படும்.
க்ரந்தம், தமிழ், தெலுங்கு, ஆங்கிலம், கன்னடம்
எல்லா மொழிகளிலும் டைப் செய்து அச்சிட்டு தரப்படும்.
(Transliteration in all Languages done here.)
Grantham to Devanagiri, Grantham to Tamil,
மற்றும் வேத ப்ரமாண புத்தகங்கள் உபநிஷத்துக்கள்
உதாத்தம், அநுதாத்தம் இவற்றுடன்
அச்சிட்டு தரப்படும்.
Contact : V.K.N. Enterprises (Printer)
Mylapore, Chenani-600 004, Phone : 98402 17036, e:mail : vknprinter@gmail.com

# புராணக் கதை

## சக்ஷுஸ்தீர்த்தம்

## காஞ்சி வாதூலன்

கௌதமி ஆற்றின் தெங்கரையில் சக்ஷுஸ்தீர்தம் எனும் ஒரு புண்ய தீர்தம் உண்டு. அதன் பெயர் வந்ததன் காரணமாக ஒரு கதை வழங்குகிறது அதைப் பார்ப்போம்.

ஒரு மலையுச்சியில் பௌவனம் எனும் நாட்டை அதே பெயர் கொண்ட அரசன் ஆண்டு வந்தான். கௌசிக கோத்ரத்தைச் சேர்ந்த ப்ராம்மணனும் அங்கிருந்தான். அவனுக்கு கௌதமன் எனும் பெயர் கொண்ட பிள்ளை இருந்தான். வேத சாஸ்த்ரங்களை பயின்றவன். அவனுக்கு மணிகுண்டலன் எனும் வைஸ்யன் நண்பனாயிருந்தான். கௌதமனோ ஏழை, மணிகுண்டலனோ தனவந்தன். இருப்பினும் நண்பர்களாகவேயிருந்தனர்.

கௌதமன் ஒரு நாள் நண்பனிடம் நாமிருவரும் யாத்ரை செய்து பல இடங்களைப் பார்த்து பணம் சம்பாத்திது வருவோம் என்று கூறினான். அதற்கு மணிகுண்டலன் தந்தை சேர்த்து வைத்ததே போறும் என்றான். நீ இப்படி பேசலாகாது. தர்மப்படி பார்த்தால் உன் உழைப்பில் நீ பொருள் சேர்க்க வேண்டும். தந்தையின் சொத்தில் குளிர் காயக் கூடாது என்று கௌதமன் கூற அவனும் யோசனை செய்து த்ரவ்யங்களை எடுத்துக் கொண்டு வந்தான்.

இருவரும் வெளி நாடுகளுக்குச் சென்று பணம் சம்பாதிக்க முனைந்தனர். கௌதமனின் கெட்ட எண்ணத்தை அறியாத மணிகுண்டலன் ஒப்புக்கொள்ள இருவரும் வெளி நாட்டுக்குப் பயணம் செய்தனர். பல நாட்டில் வ்யாபாரம் செய்து பணம் அதிகமாகவே சம்பாதித்தனர். எப்படியாவது வைஸ்யனின் தனத்தை அபகரிக்க ப்ராம்மணன் திட்டம் போட்டான். ஒரு நாள் கௌதமன் வைஸ்யனிடம் தர்மம் பெரியதா அதர்மம் பெரியதா என்றும் அதர்மம் செய்பவர்கள் தான் நன்றாக உள்ளனர் என்று கூற அவன் அதை மறுத்து தர்மமே பெரியது, தர்மவழியில் சென்றால்தான் செழிப்பு என்றுகூற வாக்குவாதம் முற்றி பந்தயம் வரை சென்றது. அதன் படி மத்யஸ்தரை நாடவேண்டும்,வென்றவருக்கு தோற்றவர் தன் பணம் முழுவதையும் தரவேண்டும் என்று ஒப்பந்தம் ஆயிற்று. அதன்படி ஒரு வழிபோக்கனிடம் இதுபற்றி கேட்க அவனும் தர்மவழியில் நல்லது நடப்பதில்லை,

அதர்மவழியில் இருப்பவர்களுக்குத்தான் தனம் சேரும் என்றுகூற கௌதமன் மொத்த தனத்தையும் எடுத்துக் கொண்டான். நட்பு கெடவில்லை. மீண்டுமொரு நாள் கௌதமன் இது பற்றிக்கேட்க வைஸ்யனும் ''அறத்தான் வருவதே இன்பம்'' என்றான். மீண்டும் பந்தயம். அதன்படி தோற்றவர் கைகளை இழக்க வேண்டுமென்பதே. அவர்கள் ஒரு மத்யஸ்தரிடம் சென்று கேட்க அவரும் கௌதமன் சார்பாகப் பேச வைஸ்யன் இரண்டு கைகளையும் இழந்தான். அதைப்பார்த்து இன்னுமா நீ தர்மத்தை கொண்டாடுகிறாய் என்று கேட்க வைஸ்யனும் நான்கு புருஷார்த்தங்களில் மேன்மையானது தர்மமே ''அறத்தினூங்கு ஆக்கம் இல்லை உயிர்க்கு'' என்று கூற மூன்றாவது பந்தயமும் வந்தது. வழக்கம்போலவே வைஸ்யன் தோற்க கௌதமன் அவனுடைய கண்களைப் பொசுக்கி குருடாக்கி அருகிலிருந்த தடாகத்தில் தள்ளிவிட்டு தனத்தை எடுத்துக்கொண்டு ஓடிப்போனான்.

தர்மத்தின் வாழ்வதனை சூதுகவ்வும் என்பதற்கு சான்றாக வைஸ்யனும் அங்கேயே முனகிக்கொண்டிருந்தான். அப்போதுதான் அந்த அத்புதம் நிகழ்ந்தது. இலங்கையின் அரசன் விபீஷணன் தன் மகனோடு பாரத க்ஷேத்ரா டனத்துக்கு அப்பக்கம் வந்து கௌதமீ நதியில் ஸ்னானம் செய்ய வந்தபோது வைஸ்யனைக் கண்டான். அவனும் நடந்த கதையைச் சொல்ல விபீஷணனின் மகன் இரக்கம் கொண்டு ஏதேனும் செய்ய தந்தையை வேண்டினான். விபீஷணர் ஆஞ்சனேயஸ்வாமி மருந்துகளைக் கொண்ட மலையை திருப்பி வைக்கப் போனபோது சில ஓஷதிகள் இங்கே வீழ்ந்தன. அதை எடுத்து வந்து இவர்மீது வைத்து இந்நதியில் ஸ்னானம் செய்ய குணம் அடைவார்'' என்று கூறி அந்த மூலிகைச் செடியைக் காட்டினார். அவனும் அச்செடியை எடுத்து வந்து அவர் சொன்னது போல செய்ய இழந்த உறுப்புகள் மீண்டும் பெற்ற வைஸ்யன் கௌதமி கங்கையில் ஸ்நானம் செய்து யோகேஸ்வரரை வணங்கி நின்றான்.

விபீஷணர்களுக்கு நன்றி கூறி மணிகுண்டலன் அச்செடியுடன் வேறு ஒரு நாட்டை அடைந்தான். இவன் அதிர்ஷ்டம் அந்நாட்டு அரசுனுடைய பெண்ணுக்கு கண்கள் இல்லை. அவள் பார்வையை மீட்டுத்தரும் நபருக்கு அவளை மணமுடிக்க இருப்பதாக இருந்ததை கேட்டு வைஸ்யன் அரசனிடம் சென்று மூலிகைச் செடியினால் அவளுடைய பார்வையை மீட்டுத் தந்தான். அரசனும் வாக்குத் தவறாமல் அவளை அவனுக்கு மணம் முடித்து ராஜ்யத்தையே அவனுக்குத் தந்து வானப்ரஸ்தம் சென்று விட்டான்.

இன்ப சாகரத்தில் இருப்பினும் மணிகுண்டலனுக்கு கௌதமன் நினைவாகவே இருந்தான். மறக்கமுடியவில்லை. தனம் கவர்ந்து போன கௌதமன் முழு தனத்தையும் ஊதாரித்தனமாக செலவு செய்து நொந்து போய் அத்ருஷ்ட வசமாக மணிகுண்டலனின் ராஜ்யத்திற்கு வந்தான். அவனைக்கண்ட மணிகுண்டலன் மிக்க மகிழ்ந்து அவனை உபசரித்தான். கௌதமனுக்கோ ஆச்சர்யம். தனம், கைகள், கண்கள் இழந்தவன் எப்படி அரசனானான் என்று. மணிகுண்டலன் தர்மத்தின் ஏற்றத்தையும் நடந்தவைகளயும் கூறி அப்ப்ராம்மண நண்பனை கேளதமீ கங்கையில் ஸ்னானம் செய்வித்து யோகேஸ்வரரை வணங்கச் செய்தான். கௌதமனும் தன் தவறை உணர்ந்தான். இருவரும் பல நாட்கள் அன்னாட்டிலேயே இருந்து யாகங்களைச் செய்து வந்தனர். மணிகுண்டலனும் சிறந்த அரசனாக இருந்து குடிகளைக் காப்பாற்றினான்.

தர்மத்தைக் காப்பாற்றி அதை கைவிடாமல் இருந்த மணிகுண்டலனுக்கு பார்வையைத் தந்ததால் இந்த கேளதமீ நதீ சக்ஷுஸ்தீர்த்தம் என்று அழைக்கப்படுகிறது.

# வேதாந்த ஸாரம்

## ஸதானந்த யோகிஸ்வரர்

வேங்கட கணபதி சர்மா

**அஸ்ய ப்ராஞ்யத்வம் அஸ்பஷ்ட உபாதிதயா அனதிப்ரகாசகத்வாத் । 44**

அதிகம் ப்ரகாசமில்லாத உபாதியுடன் இருப்பதால் ப்ராஞ்யன் என்று பெயர்.

**அஸ்ய அபீயம் அஹங்காராதிகாரணத்வாத் காரணசரீரம்,ஆனந்த ப்ரசுரத்வாத் கோசவத் ஆச்சாதகத்வாத் ஆனந்தபயகோச:ஸர்வ உபரமத்வாத் ஸுஷுப்திரத ஏவ ஸ்தூலஸூக்ஷ்மசரீர ப்ரபஞ்ச லயஸ்தான்மிதி ச உஸ்ய்தே ।। 45**

இந்த ப்ராஞ்யன் அஹங்காரத்திற்கு காரண பூதமாயிருப்பதால் காரண சரீரம் என்றும் ஆனந்தமயன் (ஆனந்தமய உறையினால் மூடப்பட்டுள்ளதால்) என்றும், இதிலேயே அவனுடைய பருப் பொருள்களும், நுண் பொருள்களும் லயமடைவதால் ஆனந்தமய கோசம் என்றும் கூறப்படுகிறான்.

**ததானீமேதாவீஸ்வர ப்ராஞ்யௌ சைதன்ய ப்ரதீப்த அபிடரத ஸூக்ஷ்மாபி: அஞ்யான ஆவ்ருத்திபி: ஆனந்தம் அனுபவத: ''ஆனந்தபுக் சேதோமுக: ப்ராஞ்ய:''இதி ஸ்ருதே: ஸுகம் அஹம் அஸ்வாப்ஸம் ந கிஞ்சித் அவேதிஷம் இதி உத்திதஸ்ய பராமர்ச உபபத்தேச்ச ।। 46**

கனவு இல்லாத தூக்கத்தில் ஈஸ்வரனும் ப்ராஞ்யனும் ஸூக்ஷ்மமாக சைதன்யத்தால் ப்ரகாசிக்கப்பட்டு ஆனந்தத்தை அனுபவிக்கின்றனர். ப்ராஞ்யன் சைதன்யனாய் ஆனந்தம் அனுபவிக்கிறான், நான் ஸுகமாய் தூங்கினேன். எனக்கு எதுவும் தெரியாது. இப்படி வேத வாக்யங்கள் இதை ஊர்ஜிதப்படுத்தும்.

**அனயோ: ஸமஷ்டி வ்யஷ்ட்யோர் வனவ்ருக்ஷயோரிவ ஜலாசய ஜலயோரிவ வா பேத: ।। 47**

தனி அவித்தை மொத்த அவித்தை தனிமரம் வனம் போலும் ஜலம் ஜலாசயம் போலும்.

**ஏதத் உபஹிதயோ: ஈஸ்வர ப்ராஞ்யோரபி வனவ்ருக்ஷ அவச்சன்ன ஆகாஸயோரிவ ஜலாசய ஜலகதப்ரதிபிம்ப ஆகாசயோரிவ வா பேத: ''ஏஷ ஸர்வேஸ்வர:(ஏஷ ஸர்வஞ்ய: ஏஷோ அந்தர்யாமீ ஏஷ யோனி: ஸாவஸ்ய ப்ரபவாப்யயௌ ஹி பூதானாம்) இத்யாதி ஸ்ருதே: 48**

தனி மரத்தின் ஆகாசமும் வனத்தின் ஆகாசமும் ஒன்றே. ஏரியில் ப்ரதிபலிக்கும் ஆகாசமும் நீரில் ப்ரதிபலிக்கும் ஆகாசமும் ஒன்றே. அது போல் ஈஸ்வரனும் ப்ராஞ்யனும் ஒன்றே. அவனே ஈஸ்வரன், அந்தர்யாமீ, எங்குமிருப்பவன், அவனே எல்லவற்றிற்கும் ஆதாரம், படைப்பிற்கும், அழிவிற்கும் காரணம் என்று வேத வாக்யமிருப்பதால்.

(தொடரும்)

# ஆடி மாத ஸ்ரீமடத்தின் விசேஷ தினங்கள்

| தேதி | கிழமை | விவரம் |
|---|---|---|
| 17-07-2019 | புதன் | உத்ராடம் பாராயணம் |
| 17-07-2019 | புதன் | உத்ராடம் தேர் |
| 19-07-2019 | வெள்ளி | அவிட்டம் தேர் |
| 19-07-2019 | வெள்ளி | அவிட்டம் பாராயணம் |
| 20-07-2019 | சனி | சங்கடஹர சதுர்த்தி |
| 28-07-2019 | ஞாயிறு | ஏகாதசி |
| 29-07-2019 | திங்கள் | துவாதசி |
| 29-07-2019 | திங்கள் | ப்ரதோஷ பூஜை |
| 08-08-2019 | சனி | ஆடிப்பெருக்கு |
| 09-08-2019 | வெள்ளி | வரலட்சுமி வ்ரதம் |
| 09-08-2019 | வெள்ளி | அனுஷம் தேர் |
| 09-08-2019 | வெள்ளி | அனுஷம் பாராயணம் |
| 11-08-2019 | ஞாயிறு | மூலம் தேர் |
| 11-08-2019 | ஞாயிறு | ஏகாதசி |
| 12-08-2019 | திங்கள் | துவாதசி |
| 12-08-2019 | திங்கள் | ப்ரதோஷ பூஜை |
| 13-08-2019 | திங்கள் | உத்ராடம் பாராயணம் |
| 13-08-2019 | செவ்வாய் | உத்ராடம் தேர் |
| 14-08-2019 | புதன் | பௌர்ணமி பூஜை |
| 15-08-2019 | வியாழன் | யஜுர், ரிக் உபகர்மா |
| 15-08-2019 | வியாழன் | அவிட்டம் தேர் |
| 16-08-2019<br>16-08-2019 | வெள்ளி<br>வெள்ளி | ஸ்ரீஸ்ரீஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் ஜயந்தி<br>அவிட்டம் பாராயணம் |
| 16-08-2019 | வெள்ளி | காயத்ரி ஜபம் |
| 19/07/19, 26/07/19, 02/08/19, 09.08.19 - 16/08/19 | | வெள்ளிக்கிழமை பூஜை |

# ருத்ர கீதை

*சின்னவன்*

சக்தித்ரயஸமேதாய மீடிஷே அஹம்க்ருதாத்மனே
சேத ஆகூதிரூபாய நமோ வாசோவிபூதயே ॥

*மூன்று சக்தி ஸமேதரும் மேகவடிவரும், அஹங்கார தத்வமானவரும், மனவடிவமானவரும், வாக்குரூபமானவரான பகவானுக்கு நமஸ்காரம்.*

தர்சனம் நோ தித்ருக்ஷூணாம் தேஹி பாகவதார்சிதம்
ரூபம் ப்ரியதமம் ஸ்வானாம் ஸர்வேந்த்ரியகுணாஞ்சனம் ॥

*தங்கள் ரூபம் அடியார்களுக்குப் ப்ரியமானது. பக்தர்களால் விரும்பி வணங்கத்தக்க உங்கள் திரு உரு காக்ஷியை காண விரும்பும் எமக்கு அளியுங்கள். அது எல்லா இந்த்ரியங்களுக்கும் நன்மை அளிக்கும் மருந்துபோன்றது.*

ஸ்னிக்தப்ராவ்ருட்கனஸ்யாமம் ஸர்வஸௌந்தர்ய ஸம்க்ரஹம்
சார்வாயதசதுர்பாஹூம் ஸுஜாதருசிராননம் ॥

*அழகிய மழைக்காலம் போல் கரு நிறமானது; எல்லாவித அழகுகளின் தொகுதியான தெளி நீண்ட அழகிய கைகளை உடையது ருசிகரமான முகமுடையது.*

பத்மகோசபலாசாக்ஷம் ஸுந்தரப்ரு ஸுனாஸிகம்
ஸுத்விஜம் ஸுகபோலாஸ்யம் ஸமகர்ண விபூஷணம் ॥

*தாமரையிதழ் போன்ற கண்களுடையது; அழகிய புருவம், மூக்கு உடையது, அழகான பற்கள், கன்னங்கள், வாய் இவைகளுடன் கூடியது ஜோடி காதுகளால் அலங்கரிக்கப்பட்டது.*

ப்ரீதிப்ரஹஸிதாபாங்கமலகைருபசோபிதம்
லஸத்பங்கஜகிஞ்சில்கதுகூலம் ம்ருஷ்டகுண்டலம் ॥

*புன்முறுவல் ப்ரியமான கடைக்கண் பார்வை உடையது, முன்னுச்சி ரோமங்களால் அழகுபடுத்தப்பட்டது, தாமரை போன்ற குஞ்சங்களுடன் விளங்கும் பட்டாடை அணிந்தது, அழகிய குண்டலங்கள் அணிந்தது.*

ஸ்புரத்கிரீடவலயஹாரனூபுரமேகலம் சங்கசக்ரகடபத்மமாலா மணி உத்தமர்திதம்

*ஒளி வீசும் கிரீடம், கால் சதனகிகள், வலையல்கள், சங்கு சக்ரம் கதை தாமரை ரத்னமாலை இவைகளால் சோபிக்கின்றது.*

ஸிஹ்ம்மஸ்கந்தத்விஷோ பிப்ரத்ஸௌபகக்ரீவ கௌஸ்துபம்
ஸ்ரியானபாயின்யாக்ஷிப்த நிகஷாஸ்மேரஸோல்லஸத் ॥

*சிங்கம் போல் தோள்களின் காந்தியை தரிக்கிறது. அழகிய கழுத்தில் கௌஸ்துப மணியை அணிந்திருப்பது, ஒரு பொழுதும் விட்டுப்பிரியாத லக்ஷ்மீதேவியினால் மறைக்கப்பட்ட உறைகல் போன்ற மார்புடன் விளங்குகிறது.*

பூரரேசகஸம்விக்ணவலிவல்குதலோதரம்
ப்ரதிஸம்க்ராமயத்விஸ்வம் நாப்யா ஆவர்த்த கபீரயா ॥


*மூச்சு விடுவதால் அசைகின்ற மடிப்புகளால் அழகிய வயிறு கொண்டது, நாபியில் உலகத்தை ஒடுக்குகிறது.*

ஸ்யாமஸ்ரோண்யதி ரோசிஷ்ணு துகூலஸ்வர்ண மேகலம்
ஸமாசார்வங்க்ரிஜன்கொருனிம்ன ஜானுஸுதர்சனம் ॥

*அழகிய இடுப்பில் விளம்கைக் கொண்டிருக்கும் பட்டாடை, தங்க ஒட்யாணம் இவைகளுடன் கூடியது, அழகிய இணை அடிகள் முழங்கால்கள் தொடைகள் கம்பீரமான முட்டங் கால்கள் இவைகளால் ஆனது.*

*(தொடரும்)*

# த்ரிபுரஸுந்தரீ வேத பாதஸ்தவம்



**நூனம் ஸிம்மாஸனேஸ்வர்யாஸ்தவாஞ்யாம் சிரஸா பஹ9ன்**
**பயேன பவமானோயம் ஸர்வாதிஸோனுவி தாவதி ॥ 86**

*சிம்மஸனேஸ்வர்யான உன் ஆணையைத் தலையில் தாங்கி பயத்துடன் வாயு பகவான் எல்லா திக்குகளிலும் ஓடுகிறார்.*

**த்ரிகலாட்யாம் த்ரிஹ்ருல்லேகாம் த்விஹம்ஸ ஸ்வரபூஷிதாம்**
**யோ ஜபேத்யம்ப தே வித்யாம் ஸோக்ஷர பரம: ஸ்வராட் ॥ 87**

*முக்கலை நிறைந்ததும், மூன்று ஹ்ருல்லேகைகள் உள்ளதும் இரு ஹம்ஸ ஸ்வரங்களால் அலங்கரிக்கப்பட்ட உனது வித்யையை ஜபிப்பவன் தன்னை ஆளும் ஆத்ம ஞானி ஆகிறான். (குரு முகமாக அறியவேண்டியது)*

**தாரித்ரியாப்தெள தேவி மக்னோபி சஸ்வத் வாசா யாசே நாஹம்ப த்வதன்யம்**
**தஸ்மாதஸ்மாத் வாஞ்சிதம் பூரையதத் உஷா ஸானக்தா ஸுதுகேவ தேனு: ॥ 88**

*தேவி ஏழ்மைக் கடலில் எப்போதும் மூழ்கியிருந்தாலும் நான் உன்னைத்தவிர யாரையும் வாக்காலும் யாசிப்பதில்லை. எனவே என் விருப்பத்தை நல்ல கறவைப்பசு இரு வேளையிலும் கறப்பதைப் போல் கறந்து பூர்த்தி செய்வாயாக.*

**யோவா யத்யத் காமானாக்ருஷ்ட சித்த:**
**ஸ்துத்வோபாஸ்தே தேவி தே சக்ரவித்யாம்**
**கல்யாணா நாமாலய: காலயோகாத்**
**தம்தம் லோகம் ஜயதே தாம்ச காமான் ॥ 89**

*தேவி யார் யார் எந்தெந்த ஆசை கொண்டு ஸ்ரீசக்ரத்தை துதித்து உபாஸிக்கிறாரோ அவர் மங்களமுண்டாகப் பெற்று சரீரத்தை விட்டபின் அந்தந்த லோகத்தையும் ஆசையையும் அடைகிறார்.*

**ஸாதக: ஸததம் குர்யாத் ஐக்யம் ஸ்ரீசக்ரதேஹயோ:**
**ததா த்வ்யாத்மனோரைக்யம் ஏதாவதனுசாஸனம் ॥ 90**

*ஸாதகன் ஸ்ரீசக்ரமும் தன் தேஹமும் ஒன்று என்றும் அப்படியே தேவியும் தனதாத்மாவும் ஒன்று எனவும் எப்போதும் நினைக்க வேண்டும். இதுவே முடிவான உபதேசம், கட்டளை.* *(தொடரும்)*

# பித்ரார்ஜிதம்

*அல்பஸ்ருதன்*

ஜனவரி18 தொடர்ச்சி

பொருளடக்கம் ஸமன்வய, அவிரோத, ஸாதன, பலன் என்று நான்கு அத்யாயங்கள் இதில் உள்ளன. ஸமன்வய அதிகாரம் ப்ரம்மம் ஆன்மா உலகு இவற்றிற்கு உள்ள தொடர்பு பற்றியது. அவிரோத அதிகாரம் மாறுபட்ட கொள்கைகளை கண்டித்து உலகத்தின் தோற்றம் மறைவு பற்றியும் ஆன்மாவின் பண்புகள் பற்றியும் கூறும்.

ஸாதன அதிகாரம் ப்ரம்மவித்தை அடைவதற்கு சாதனங்கள், மறு பிறப்பு ஏற்படும் விதங்களையும் கூறும். பல அதிகாரம், ப்ரம்ம வித்தையின் பலனையும் இறந்த பின் அடையும் நிலையையும் ஆன்ம விடுதலையின் பண்பையும் கூறும்.

ஸூத்ரப்பொருளை நிர்ணயிப்பதற்கு வேதம், உபனிஷத், பகவத்கீதை இவைகளை மேற்கோள்காட்டி ஒருங்கவிடுவது முறை. சில ஆசார்யர்கள் ஸ்ரீமத் பாகவதத்தையும் இதிகாஸங்களையும் மேற்கோள் காட்டியுள்ளனர்.

ப்ரபஞ்சம் எப்படிப்பட்டது? உண்மை இருவகைப்பட்டது. சிந்திக்ககூடியது, சிந்திக்க கூடாதது. முந்தயதை தர்கத்தின் மூலமாக அறியலாம். பிந்தயதை சாஸ்த்ரங்கள் மூலமாகத்தான் அறியலாம்.

அகண்டமான பொருள்கள் பல இல்லை. எல்லாவற்றிற்கும் ப்ரம்மமே மூலம். அது ஐந்து பூதங்களைப் படைத்து அவற்றுள் தங்கி ப்ரபஞ்சத்தை உண்டாக்குகிறது. இதை ஸ்ரீசங்கரர் ப்ரம்மம் ஒன்றே. மாயாசக்தியினால் பலவாறாகத் தோன்றுகிறது என்பார். ராமானுஜரோ ப்ரம்மம் வியத்தகு ஆற்றல் உடையது, உலகமாகப் பரிணமிக்கமுடியும் என்பர். இல்லறம் துறவறம் இரண்டிலும் உருவமற்ற ப்ரம்மத்தை உபாசிக்க உருவ வழிபாடு வந்தது. ஆன்மாவின் குறி வீடுபேறு. இப்பிறவியிலேயே ஜீவன்முக்தி அடையலாம். இது சங்கர ஸம்ப்ரதாயம். இப்பிறவி கழிந்தபின் முக்தி என்பர் ராமானுஜர் மத்வர், பிறரனைவரும்.

ப்ரம்மம் எப்படிப்பட்டது? இப்ப்ரபஞ்சத்துக்கும் , ஆன்மாக்களுக்கும் நிமித்த, உபாதான காரணம் ப்ரம்மமே. இவ்வுலகம் ''ஸத்'' தின் தோற்றம். ஆன்மாக்கள் ''சித்'' தின் தோற்றம். ப்ரம்மம் ஸத் சித் ஆனந்தம். சில உபனிஷத்களில் வரும் ஆதித்யன் வைஸ்வானரன்,

ப்ராணன், ஜோதி, ஆகாசம் எனப்படுபவை ப்ரம்மமே. சில உபநிஷத் வாக்யங்கள் ஆன்மாவைப் பேசும், சில ப்ரபஞ்சத்தைப் பேசும், சில இரண்டையும் பேசும். எல்லாம் ப்ரம்மத்தை தான் பேசும். ஆன்மாவுக்கு சொன்ன லக்ஷணங்கள் எல்லாம் ப்ரம்மத்துக்குத் தான்.

ப்ரம்மமே அனைத்துக்கும் ஆதாரம். இதை அறிந்து கொள்ள அனைவருக்கும் உரிமை உண்டு. உதாரணம் ஜானஸ்ருதி ரைக்குவர் உபதேசம். ஸாங்க்யமதகோட்பாடு உபநிஷத்களிலிருந்து வந்தவை அல்ல. ஸாங்க்யம் ப்ரக்ருதி உலகக் காரணம் என்று கூறும். உபநிஷத் ப்ரம்மம் காரணம் என்று கூறும். ஸ்ரீசங்கரர் ஸாங்க்யம்யோகம், ந்யாயம் வைசேஷிகம் மீமாம்ஸை, பௌத்தம் சமணம் இவற்றைக் கண்டித்து ப்ரஹ்ம வாதத்தை நிரூபிக்கிறார்.

(தொடரும்)

## திருப்தியுடன் வாழ்வோம்



மனம் எதை தீவிரமாகச் சிந்திக்கிறதோ, அதுவாகவே மாறும் தன்மை கொண்டது.

கடவுளிடம் பிரிந்து வந்துள்ள நாம், பிறவியின் முடிவில் அவரிடமே ஐக்கியமாக முயல வேண்டும்.

பிறர் துன்பத்தைப் போக்க நம்மால் ஆன உதவியைச் செய்வது அவசியம்.

ஆடம்பரமாக உண்பதும், உடுத்துவதும் மட்டுமே தரமான வாழ்வாகாது. இருப்பதில் திருப்தியுடன் வாழ்வதே சிறந்தது.

எப்போதும் மனதில் அது வேண்டும், இது வேண்டும் என்று சிந்தித்துக் கொண்டிருப்பவனே பரம ஏழை.

- காஞ்சிப் பெரியவர்

# மகாபாரத சுருக்கம்

பாரதக் கதையை மூலமட்டும் சுருக்கமாக இங்கே தருகிறோம். டாக்டர் வே. ராகவன் தொகுத்துத் தந்ததை தமிழில் மொழி பெயர்த்து அளிக்கிறோம். மொழி பெயர்ப்பாளர் ஜயவிஜயா

**துர்யோதனன்**

**பாண்டவேப்யோ பயம் நஸ்ஸ்யாத் தான் விவாஸாயதாம் பவான்**
**நிபுணேன அப்யுபாயேன நகரம் வாரணாவதம் ॥**

*தந்தையே! பாண்டவர்களிடமிருந்து நமக்கு அபாயம் உண்டு. அதனால் அவர்களை அப்புறப்படுத்தி வாரணாவதத்திற்கு அனுப்பி விடுங்கள்.*

**யதா ப்ரதிஷ்டிதம் ராஜ்யம் மயி ராஜன் பவிஷ்யதி**
**ததா குந்தீ ஸஹாபத்யா புனரேஷ்யதி பாரத ॥**

*தந்தையே! இந்த ராஜ்யம் என்னிடத்தில் நிலைத்திருக்க குந்தீ தன் பிள்ளைகளுடன் மீண்டும் வரலாம்.*

**ததா துர்யோதன ராஜா ஸர்வாஸ்து ப்ரக்ருதீச்ஸனை:**
**அர்தமானப்ரதானாப்யாம் ஸஞ்சஹார ஸஹானுஜ: ॥**

*அப்படிச் சொல்லி பெற்றுக் கொண்ட ராஜ்யத்தை துர்யோதனன் தன் தம்பிகளுடன் குடிமக்களை மகிழ்வித்து வெற்றி கொண்டான்.*

**த்ருதராஷ்ட்ரப்ரக்ருதாஸ்து கேசித் குசல மந்த்ரிண:**
**கதயாம்சக்ரிரே ரம்யம் நகரம் வாரணாவதம் ॥**

*த்ருதராஷ்ட்ரனிடம் சில மந்த்ரிகள் வாரணாவதம் எனும் இடத்தைப் புகழ்ந்தனர்.*

**கத்யமானே ததா ரம்யே நகரே வாரணாவதே**
**கமனே பாண்டுபுத்ராணாம் ஜஞ்யே தத்ர மதி: ॥**

*வாரணாவதத்தின் மேன்மையைக் கேட்ட பாண்டு புத்ரர்களுக்கும் அங்கு போக அவா வந்தது.*

**யதா த்வமன்யத் ந்ருபோ ஜாதகௌதூஹலா இதி**
**உவாச ஏதானேத்ய ததா பாண்டவான் அம்பிகாஸுத: ॥**

*அவர்களுக்கு அங்கு செல்வதில் ஆவல் உள்ளதைத் தெரிந்து கொண்ட த்ருதராஷ்ட்ரன் அவர்களிடம் கூறினான்.*

**தே தாத யதி மன்யத்வமுத்ஸவம் வாரணாவதே**
**கிஞ்சித்காலம் விஹ்ருத்யைனம் ஸுகினம் புனரேஷ்யத ॥**

*பிள்ளைகளே நீங்கள் அங்கு போக விரும்பினால் சென்று வாருங்கள், ஸுகமாய இருந்து மீண்டும் திரும்பி வாருங்கள்.*

**த்ருதராஷ்ட்ரஸ்து தம் காமமனுபுத்ய யுதிஷ்டிர:**
**ஆத்மன்ச்ச அஸாஹயத்வம் ததேதி ப்ரத்யுவாச தம் ॥**

*த்ருதராஷ்ட்ரனனின் விருப்பத்தையும் தன் அவாவையும் எண்ணி அப்படியே ஆகட்டும் என்றார் யுதிஷ்டிரர்.*

**துர்யோதன: பரம் ஹர்ஷமகச்சத் ஸ துராத்மவான்**
**ஸபுரோசனமானீய ஸசிவம் வாக்யமப்ரவீத் ॥**

*இதைக் கேட்ட துர்யோதனன் மிக்க மகிழ்ச்சி கொண்டு தன் அமைச்சன் புரோசனனை வருவித்து கூறினான்.*

**பாண்டவா த்ருத்ராஷ் ட்ரேண ப்ரேரிதா வாரணாவதம்**
**தத்ர கத்வா சதுச்சாலம்க்ருஹம் பரமஸம்வ்ருதம்**
**நகரோபாந்தமாஸ்ருத்ய காரயேதா மஹாதனம் ॥**

*புரோசனனே நீ வாரணாவதம் சென்று த்ருதராஷ்ட்ரனால் அனுப்பிக்கப்படும் பாண்டவர்களுக்கு விலை உயர்ந்த மாளிகையை கட்டவேண்டும்.*

**சணம் தைலம் க்ருதம் சைவ ஜது தாருணீ சைவ ஹி**
**தஸ்மின் வேஸ்மனி ஸர்வாணி நிக்ஷிபேதாஸ்ஸமந்தத; ॥**

*அவ்வீட்டில் சணல் எண்ணெய் அரக்கு கட்டைகள் இவைகளை ஆங்காங்கு வைக்கவேண்டும்.*

**வேஸ்மன்யேவம் க்ருதே தத்ர க்ருத்வா தான் பரமார்சிதான்**
**வாஸயேதா: பண்டவேயான் யதா துஷ்யேச்ச மம பிதா ॥**

*இப்படி வீட்டை நிர்மாணம் செய்தபின் என் தந்தை மகிழும் அளவிற்கு பாண்டவர்களை வரவேற்க வேண்டும்.*

**ஞாத்வா ச தான் ஸுவிஸ்வஸ்தான் சயனானகுதோபயான்**
**அக்னிஸ்தவயா ததோ தேயோ த்வாரதஸ்தஸ்ய வேஸ்மன: ॥**

நம்பிக்கையுடன் இருக்கும் அவர்கள் தூங்கும்போது எப்பக்கத்திலிருந்தும் ஆபத்தில்லாமல் பார்த்துக் கொண்டு அவ்வீட்டிற்கு தீ வைத்துவிடு.

**ஸ ததேதி ப்ரதிஞ்யாய ஸர்வம் சக்ரே புரோசன:**
**பாண்டவாஸ்து குரூன் வ்ருத்தான் அபிவாத்ய யதாவ்ரத:**
**ஸர்வா மாத்ருஸ்ததா ஆப்ருச்சத ப்ரயயுர் வாரணாவதம் ॥**

அவனும் சரி என்று சொல்லி அதுபோலவே செய்தான். பாண்டவர்களும் ஆசாரயர்களை வணங்கி, ஆசி பெற்று வாரணாவதம் சென்றனர்.

(தொடரும்)

## வாழ்விக்க வந்த புராண வசனங்கள்

பகுத்தறியும் தன்மை இல்லாமை பல கஷ்டங்களுக்குக் காரணம்.

நல்ல குணங்களை அடைய முயலவேண்டும்.வெளி அலங்காரங்களால் எப்பயனுமில்லை. சுபாஷிதம்

தன் குணங்களைப் பற்றி தற்புகழ்ச்சி செய்துகொள்வது இந்த்ரனையும் தன் பதவி இழக்கச்செய்யும்.

சிறந்த மனிதர்கள் தம் குறிக்கோளை தம் மனோபலத்தால் அடைந்தனர்.வெளி உதவியினால் அல்ல. போஜன்

தன் மேன்மைக்கு தானே உற்ற உறவு.தானே தனக்கு எதிரி. கீதை

தன்மீது கட்டுப்பாடு கொண்டுள்ளவர்கள எமனும் ஒன்றும் செய்ய முடியாது. ஆங்கிரஸ் ஸ்ம்ருதி

ஒருவனது இன்னலோ, அதிர்ஷ்டமோ வெகுகாலம் நிலைத்து நிற்பதில்லை. யோக வாஸிஷ்டம்

தன் வருவாயைக் காட்டிலும் குறைந்தசெலவே செய்ய வேண்டும். யோக வாஸிஷ்டம்

நல்ல ஆரோக்யம் சதுர்வித புருஷார்த்தங்களுக்கு மிகவும் முக்யமானது. சரக சம்மிதை

ஒருவனின் மேன்மைக்குக் காரணம் அவருடைய குணமும் நல்நடத்தையும் தான். அவருடைய செல்வமோ அறிவோ அல்ல.

சோம்பேறிததனம் தான் உடலில் இருக்கும் எதிரி.

தான் விரும்புவதாகவே தான் ஆவார். உத்யோக பர்வம்

யாவற்றிற்கும் எல்லை உண்டு, ஆசைக்கு இல்லை. ஸ்காந்தம்

உ

# ஹிந்து மத ப்ராமண நூல்கள்

**ஸ்ரீவத்ஸ ஸோமதேவ சர்மா**

## வேதாங்கங்கள்

**சீக்ஷா** வேதத்தை ஸ்வரமில்லாமல் எழுத்தைவிட்டு குறில் நெடில் தவறி உச்சரித்தால் பலனைத்தராததோடு, அப்படிச் சொல்பவனைக் கெடுக்குமாதலால் மிக்க ஜாக்கிரதையாக ஓதவேண்டும். உதாதம், அனுதாத்தம், ஸ்வரிதம் என ஸ்வரம் மூன்று வகைப்படும். அது ஹ்ரஸ்வம், தீர்கம், ப்லுதம் என மூன்று பிரிவு களுடன் உள்ளது. இவைகளைப்பற்றிக்கூறுவது சீக்ஷா எனும் நூல்.

இச்சாஸ்த்ரம் பாணினி முனிவரால் எல்ல வேதங்களுக்கும் பொதுவாக ஐந்து காண்டங்களாகவும், பல முனிவர்களால் ஒவ்வொரு வேதத்திற்கும் தனித்தனியாக ப்ராதிசாக்யங்களாகவும் செய்யப்பட்டுள்ளது.

**வ்யாகரணம்** ''ஒரு சப்தம் நன்கு உச்சரிக்கப்படின் ஸ்வர்க லோகத்தில் இஷ்டத்தைக் கொடுக்கும்'' என்ற சொற்படி ஒவ்வொரு பதத்தையும் குற்றமறக் கூறுதல் அவஸ்யம். சீக்ஷா சாஸ்த்ரத்தால்எழுத்து சுத்தமாகத் தெரிந்தாலும், பதத்தை அறிய இன்னொரு சாஸ்த்ரம் அவஸ்யம். இதுவே வ்யாகரணம். நடராஜப் பெருமானால் உடுக்கையிலிருந்து எழுப்பபட்ட 14 ஸூத்ரங்களை ஆதாரமாகக் கொண்டு எட்டு அத்யாயங்களில் பாணினி மகரிஷி ''அஷ்டாத்யாயி'' எனும் நூலை எழுதினார். அதற்கு காத்யாயனர் வார்திகம் எழுதினார். அதற்கு பதஞ்சலி மகரிஷி மகாபாஷ்யம் எனும் விளக்கம் எழுதினார். வேத அங்கமல்லாமல் பல வ்யாகரணங்கள் எழுதப்பட்டுள்ளன

**நிருக்தம்** அர்த்தத்தை உணராத வேதோச்சாரணத்திற்கு பூர்ண பலன் இல்லாததால் யாஸ்க முனிவரால் 13 அத்யாயங்களில் எழுதப்பட்டது. அதில் நாம், ஆக்யாத நிபாத, உபஸர்க என நாலு வகைப்பட்ட பதங்களை விவரித்து பொருளும் கூறப்பட்டுள்ளது. வைதிக பதார்த்தத்தை விளக்க ஐந்து அத்யாயங்கள் கொண்ட ஒரு நிகண்டுவும் இவராலேயே இயற்றப்பட்டது.

**சந்தஸ்** ஒவ்வொரு மந்த்ரத்தையும் அதற்குரிய ரிஷி, சந்தஸ் தேவதை இவைகளை அறிந்து சொல்ல வேண்டும். பிங்கள முனிவரால் எட்டு அத்யாயங்களில் இன்னூல் செய்யப்பட்டுள்ளது.

அதில் மூன்று அத்யாயங்கள் வேத சந்தஸ் பற்றியும் ஐந்து அத்யாயங்கள் லௌகிக (புராண இதிஹாஸ) சந்தஸ் பற்றியும் கூறும்.

**ஜ்யோதிஷம்** வேதோக்த கர்மாக்களை அனுஷ்டிக்க நாள் நக்ஷத்ரம் லக்னம் முத்லியவைகளை விளக்கி, ஆதித்ய, லகடர் கர்கர் முதலியவர்களால் எழுதப்பட்ட நூல்.

**கல்பம்** வேதம் எல்லையற்றதாகையால் மறைந்துள்ள சாகையிலிருந்து எக்கர்மாவை எப்படி, எக்காலத்தில், எதற்கு பிறகு செய்வது எனபதை விளக்குவது இன்னூல். ஹோதாவுக்கு வேண்டியவைகளை ஆஸ்வலாயன சாங்காயன கல்பங்கள்--- அத்வர்யுவிற்கு வேண்டியவைகளை போதாயன , ஆபஸ்தம்ப, காத்யாயன கல்பங்களும் உத்காதாவிற்கு வேண்டியவைகளை லாட்யாயன த்ராஹ்யாயன கபங்கள் விவரிக்கின்றன.

(தொடரும்)

## வாழ்விக்க வந்த புராண வசனங்கள்

*ந்யாயமற்றவனால் தனக்கும் பயனில்லை, மற்றவர்கட்கும் பயனில்லை சாந்தி 89-15*

*பாவவழியில் செல்பவனை அவன் சகோதரனும் கைவிடுவான். சா நீதி*

*அவமானம் மரணத்தை காட்டிலும் மோசமானது.வன 26-12*

*ந்யாயமான வழியில் சேர்த்த பொருளே உண்மையானது.*

*அன்யாய வழியில் சேர்த்தது நிந்திக்கதகுந்தது. சா பர்வம்218-19*

*கல்லாதவர்க்கு மௌனமே சிறந்த ஆபரணம். அதுவும் கற்றவர்கள் நிறைந்த அவையில். பர்த்ருஹரி*

*செழுமைக்கு மூலகாரணம் செயல்திறன்.சோம்பேறித்தனம் இதற்கு நேர் எதிரான காரணம்.*

*நூறுக்கும் மேலான இன்னல்கள் அறிவில்லாதவர்க்கு வரும்.*

# ஞானியும் ஞானபந்துவும்

வஸிஷ்டர்: ராம! எப்போதும் ஞானியாயிருத்தல் வேண்டும், ஞானபந்துவாக இருக்கக்கூடாது. ஞானபந்துவைக் காட்டிலும் அக்ஞானியே மேல்.

ஞானியானவன் அஹம்பிரம்மாஸ்மி என்ற உணர்ச்சியால் ஸர்வாத்மபாவம் பெற்றவன். பகவத்கீதையில் சொல்லிய ஸ்திதபிரக்ஞனுடைய குணங்களையுடையவன். ஞானபந்து என்ற பதத்திற்கு ஸத்கர்மங்களில் சிரத்தையை விட்டுவிட்டு போகத்தில் ஆசையால் தன்னையும் பிறரையும் பந்தத்தில் ஈடுபடச் செய்பவன் என்று பொருள்.

எவன் ஸாதன சதுஷ்டயத்தை ஸம்பாதிப்பதில் பிரயத்தனத்தை விட்டுவிட்டு சில்பிகள் போல் பணம் ஸம்பாதிப்பதற்காக சாஸ்திரங்களை உபதேசிக்கிறானோ எவனடைய சாஸ்திரார்த்த ஞானம் வைராக்யாதிகளைக் கொடுப்பதில்லையோ எவன் பணம் வஸ்திரம் சாப்பாடு முதலியவைகளையே ஞானபலனாக நினைக்கிறானோ அவன் ஞானபந்து, இவனை அசுப ஞானபந்து என்பர்.

சுப ஞானபந்துவானவன் பிரம்ம ஞானத்தை உத்தேசித்து தன் அதிகாரத்துக்கு அனுகுணமாக நிஷ்காம கர்ம அனுஷ்டானம் செய்துகொண்டு வேதத்தில் சொல்லிய சுபமான ஆசரணையிருப்பவன். அவனக்கு ஞானம் ஸமீபத்திலிருக்கிறது.

ஆத்மஞானம் ஒன்றே ஞானம். இதர ஞானங்கள் ஸாரத்தை போக்காதபடியால் ஞானத் தோற்றமே. ஆத்ம ஞானமடையாமல் இதர ஞானத்தால் சந்தோஷிப்பவரும் ஞானபந்துவே. விஷயங்கள் சாந்தியடைந்து உலகனைத்தும் ஸத்யஞான அநந்த பிரம்மமாக பிரகாசிக்கும் வரையில் ஞானப்யாஸம் செய்ய வேண்டும். ஆகாரத்திற்காக சாஸ்திரத்தில் விலக்கப்படாத தொழில்களை செய்யவேண்டும். ஆகாரத்தையும் பிராணனைக் காப்பாற்றுவதற்காக உட்கொள்ள வேண்டும். பிராணனைக் காப்பாற்றுவதும் தத்வஞானத்தை இதே ஜன்மத்தில் அடைந்தே தீருவதற்காக, என்று உருதிகொள்ள வேண்டும். தத்வ ஞானமோ மறுபடியும் ஜன்ம ஜராதி துக்கம் வராமலிருக்கும் பொருட்டு ஞானத்தை அடைய வேண்டும்.

(ஞான வாஸிஷ்டம்)